There are also proposals to help the various polytechnics in our State. This is a welcome thing. We are really happy and proud that, not only on the side of education but also on the side of technical education, we are improving by leaps and bounds. It is also quite welcome that the Government are helping the polytechnics in the various districts. I suppose that if we make a study, the State of Madras would be leading in the matter of imparting technical education. Possibly, the Minister for Education may have some information on this point.

With regard to Grant XVI—Medical, there is a controversial issue, namely, the question of family planning, which the Government of Madras have taken up in right earnest and in regard to which they are doing their best. But, still I do not understand why a sum of Rs. 15 or Rs. 25 should be paid to those who undergo the process of operation. If I remember aright, an observation was made by the Prime Minister, Pandit Jawaharlal Nehru, that as in other cases, Madras was leading in the matter of family planning also. I also remember that when it was brought to his notice that there was an element of compulsion or that some sort of bait was given to those who underwent the operation, he expressed the view that it should not be so. Apart from any personal opinion with which we are not immediately concerned, I am at a loss to know why a sum of Rs. 15 or Rs. 25 is given to a person for undergoing this operation. After all, when a person comes to the decision that family planning is necessary, he undergoes the operation. If the Government should pay a man just to go to the hospital for an operation and to return therefrom, then I should think all persons—whoever they might be—should get double if not three times this amount, for undergoing other operations. I would like to know why the Government should incur expenditure on this item and then come before this House for approval.

17th September 1958] [Sri Mohamed Raza Khan]

Regarding Capital Outlay on Industrial Development, a sum of Rs. 10 lakhs is to be given. The Government have given loans to two or three private companies. I do not want to go into details. Why not these companies go to the Industrial Finance Corporation for financial assistance? Where is the necessity or the urgency for the Government of Madras to advance loans to the private companies? The Industrial Finance Corporation came into being only to help the private companies whenever they were in need of loans, either temporarily or for a long period. I think the Hon. the Finance Minister will clarify this point. I would also like him to clarify whether there was any urgency to advance these loans to these private companies.

THE HON. SRI C. SUBRAMANIAM : It is not a 'loan' but 'participation in the share capital'.

SRI MOHAMED RAZA KHAN : The point to be decided is whether the Government by purchasing these shares acquire some status or they felt that they might just help the companies to tide over their difficulties. However, I leave the matter to the Finance Minister for his kind clarification. Thank you, Sir.

* SRI T. PURUSHOTHAM : Mr. Chairman, Sir, at the outset permit me to congratulate Sri K. Balasubramanya Ayyar on his elevation as the Deputy Leader of the Opposition in the constitution of this House.

THE HON. SRI C. SUBRAMANIAM : At least, he should change his place (Laughter).

* SRI T. PURUSHOTHAM : Sir, the significant feature of the Supplementary Demand placed before this House is that the Government are pushing forward the Plan schemes. Of course, we have discussed the schemes to be included in the Second Five-Year Plan and the Government have come forward to work out these schemes expeditiously. So, I feel that there is not much point in what the hon. Member Sri Mohamed Raza Khan said, namely, that the Government ought not to have taken up these schemes without the sanction of the Legislature. It is a welcome news that the Hon. the Finance Minister during his recent visit to Delhi has had the assurance that our Plan allotments will not be cut down. So, we should make every endeavour to implement the schemes and utilise the full allotment made to our State under the Second Five-Year Plan.

Referring to other items, Sir, hon. Members would be happy at the provision of Rs. 1,20,700 under Demand XV—Education for organization and conduct of games and athletic competitions, at State level. The details are given on page 12 of the statement placed before us. We used to have, what were called, 'Grigg

Memorial Sports' for pupils of secondary schools at district level previously. I am really glad that games and athletic activities will be sponsored by the Government at State level in future. This would be a great encouragement to physical activities in our educational institutions. My only hope is that we will not stop with arranging them at State level but that such activities will be arranged at national level as well. I should like to suggest that these games and athletic activities should not all be of the Western types of sports. We should encourage indigenous and national games and we should be happy to hear from our Education Minister how far this has been done hitherto. I trust that a definite lead will be given in the matter of introducing national and indigenous athletic features in our educational institutions.

Speaking on the Education Grant, Sir, I am glad, as has been remarked by the hon. Member Sri Mohamed Raza Khan, that with the creation of the Directorate of Technical Education, thanks to the incessant effort in this behalf of the hon. the Leader of the Opposition, greater impetus is now being given to push up schemes of expansion of technical education in this State. I would suggest in this connection that the Government should also consider the question of creation of a separate Directorate of University Education because there is a feeling that higher education is not
4 p.m. receiving adequate attention at present. With the expansion of elementary education and the bringing in of revised schemes of secondary education, it is admitted that the hands of the Director of Public Instruction are too full, and there is a feeling, as I said, that collegiate education is not receiving that amount of attention that is needed. That is why I have suggested that we should have a separate Director of Collegiate Education. As the Hon. the Minister for Education will admit, there is also need for giving greater impetus to women's education. So, a directorate of that kind to deal separately with collegiate education as well as to give due encouragement to women's education should be welcome. I am not suggesting anything radical. In the Public Works Department, we have got a Chief Engineer for Irrigation, another Chief Engineer for Public Works (General), a third for Highways, and so on. So also with the expansion of the activities of the Education Department, I think we should have a separation of functions so that all branches of education could receive adequate attention. So it is, I have suggested that the Government should consider this aspect of the question.

Sir, a study of the schemes included under 'Medical' shows the satisfactory advance made in the field of family planning. As I had occasion to refer to this only the other day, there were some doubts as to the response that we would have in regard to family planning. We are glad to note that the public have begun to appreciate the benefits of family planning. I learn that married people

17th September 1958] [Sri T. Purushotham]

resort to family planning clinics in larger numbers now. We find that a scheme has now been provided for the popularisation of the surgical method of family planning and that grants are to be given to Government servants, employees of the Corporation of Madras, and teachers of aided educational institutions. I do not know why the scheme is sought to be applied only to Government servants and teachers. I do not know whether this is so because they are generally found to be more prolific than others and perhaps ask for more pay on this score. I do not know whether the industrial workers are more prolific or the intellectual men in service, and who need the family planning treatment most. Whatever it is, the House would be glad to know from the Hon. the Finance Minister why the Government have thought it fit to take in the Government servants, the Corporation servants, and the teachers for the popularisation of family planning among them to undergo surgical operation.

(Deputy Chairman in the Chair.)

Under the same head, 'XVI—Medical', there is a provision for research in indigenous and other systems of medicine. I should like to know whether this includes the scheme for the establishment of a Siddha Research Institute, as the same has been so often pressed in this House. If not, this aspect of the matter should be considered. The Government have specifically stated—I am just quoting from the Report of the Committee on Government Assurances—that the development of the pure siddha system of medicine would be taken up by Government and that the establishment of a research institute was under the active consideration of the Government and that the Central Government have also assured allotment for the purpose. I hope the Government would see that this assurance is implemented as early as possible and that necessary provision is made, if not already included in this item of Supplementary Demand.

I am glad to find that due encouragement is given to khadi development, and we find that the Government propose to open khadi sales depots in fairs and festival centres. This is a good move, because recently at Courtallam, they had for the season a khader depot, and I am glad to say that it was quite popular. We are having fine varieties of khadar now, and the Government should have one or two big khadi sales vans also fitted up to be taken to the various centres. I hope the Government will do this.

Another point I would mention is that under 'Public Works', it is pleasing to note that the Government approved the proposals of the Chief Engineer for Public Works for the formation of parks, fountains, etc., at the Lower Bhavani and Amaravathi Dam sites at an expenditure not exceeding Rs. 1,80,000 and Rs. 1 lakh, respectively. This is very necessary. One has to visit the Sathanur

dam near Tiruvannamalai to see how popular these places are on account of the beautiful parks that have been provided there. A number of people from the villages around gather there in the evenings to see the illumination in the gardens. The Government, I trust, would do this in the case of all projects. There is no need to come forward with a Supplementary Demand for this item of expenditure. They could make this allotment in the usual course when they sanction the estimates. There are several new schemes like Vidur scheme, Vaigai project, etc., coming up. In all these projects, this sort of aesthetic improvement should be there. Parks and fountains should be provided for the benefit of the public. I would also appeal to the Minister for Electricity to issue a directive to the Madras State Electricity Board to provide for such aesthetic development in power project areas and allot the necessary funds for the same.

Hon. Members would find that under ' Compensation to zamindars ', a sum of Rs. 46,79,000 is being demanded for payment of advance compensation to landholders consequent on the abolition of the zamindari system. Hon. Members would have noted a recent decision of the Andhra Legislature that the payment of compensation to landholders in the case of areas to be transferred to Tamil Nad would be withheld till perhaps after the transfer of territory took place. This means, all that liability would fall on the Madras Government. As is anticipated, the ' Pataskar Award Bill ' should come up in October or January next and we should provide heavy supplementary allotment under this head. I do not know whether at the time of the transfer of areas and consequential financial adjustments the outstanding liabilities in question would be taken into consideration for adjustment. Anyway, I hope the Hon. the Finance Minister would have this examined and tell us what the position is in regard to the latest legislation on the Andhra side and what action the Madras Government are going to take in the matter.

As regards the items included in the Excess Expenditure Statement, they have all been scrutinised by the Public Accounts Committee, and I hope hon. Members will have no difficulty in accepting them.

4-10 p.m. * **Dr. A. CHIDAMBARANATHAN** : மதிப்பிற்குரிய துணைத் தலைவர் அவர்களே, கனம் அமைச்சர் தந்துள்ள துணைச் செலவறிக்கை மீது சில சொற்கள் பேச விரும்புகிறேன். சில திட்டங்களின் செலவிற்கு அரசாங்கம் ஏற்கெனவே பணம் கொடுத்துவிட்டது. சமூக நலத் திட்ட வட்டாரங்களிலும், தேசீய அபிவிருத்தித் திட்ட வட்டாரங்களிலும், அரசியல் தியாகிகளையோ, அவர்களுடைய குடும்பத்தினரையோ வேலையாட்களாக நியமிக்கும் திட்டம் இவைகளில் ஒன்று. இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது என்று கனம் அமைச்சர் தெரிவித்திருக்கிறார். அவர்களுக்கு இந்த உத்தியோகம் கொடுப்பதற்காக இந்த உத்தியோகத்தில் 312 இடங்கள் வகை செய்யப்பட்டிருக்கின்றன. இந்த உத்தியோகஸ்தர்களின் சம்பள விகிதம் ரூபாய் 45—3—60—5—90. இந்த வகையில் செலவிடுவதற்காக 1,28,000 ரூபாய்

**17th September 1958] [Dr. A. Chidambaranathan]**

ஏற்கெனவே கொடுக்கப்பட்டிருக்கிறது. தியாகிகளுக்கு நம்மாலான ஒரு நன்மையைச் செய்யவேண்டும். ஆயினும், இந்த 312 இடங்கள் அனைத்தையும் அரசியல் தியாகிகளுக்கே ஒதுக்கிவைப்பது ஒத்தது தானா என்பது பற்றிச் சிந்திக்க வேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன். கனம் அமைச்சரின் அறிக்கையைப் படித்தால், 312 இடங்களும் அவர்களுக்கே ஒதுக்கப்பட்டிருப்பதுபோல் தெரிகிறது. அறிக்கையில் அந்த முறையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. தகுதியுள்ள மற்றவர்களும் இந்த வேலைக்கு எடுத்துக்கொள்ளப்படுவார்கள் என்று நம்புகிறேன்.

அடுத்தபடியாக, நில வருவாய்த் துறையை எடுத்துக்கொண்டால், கன்னியாகுமரி மாவட்டத்திலும், கோயம்புத்தூர் மாவட்டத்தின் சில தாலூகாக்களிலும் நில அளவு மறுபடியும் அளக்கப்படும் என்று கனம் அமைச்சரின் அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. இந்தப் பகுதிகளில் நிலத்தை மறு அளவை செய்த பிறகு மாநிலத்தின் மற்றெல்லாப் பகுதிகளிலும் அளக்க வேண்டும் என்று கூற விரும்புகிறேன். அதைச் செய்வது கூடுமா என்று சிந்திக்க வேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன். கோயம்புத்தூரில் இந்தத் தாலூகாக்களில் நிலங்களை அளப்பதற்கு 5 ஆண்டுகள் ஆகும் என்பது குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகு மாநிலத்தின் மற்றப் பகுதிகளிலுள்ள நிலங்களை அளப்பதற்கு ஒரு ஐந்தாண்டுத் திட்டத்தையோ அல்லது எட்டாண்டுத் திட்டத்தையோ வகுத்து நிறைவேற்றுதல் கூடுமா என்று பார்க்க வேண்டும். ஏனென்றால், சில மாவட்டங்களைப் பொறுத்தவரையில், கணக்கில் (Record) இருக்கும் நில அளவு ஒருவிதமாகவும், உண்மையில் உள்ள நில அளவு வேறு விதமாகவும் இருக்கின்றன. சேலம், தஞ்சை மாவட்டங்களில் நில அளவு அம்மாதிரி இருக்கிறது என்பதை அரசாங்கத்தார் கவனித்து உரியன செய்யவேண்டுமென்று தெரிவிக்கிறேன்.

அடுத்தபடியாக, பல பல்தொழில் நுணுக்கப் பள்ளிகளுக்கு அரசாங்கம் நன்கொடைகள் அளிக்க முன்வந்திருப்பதைப் பாராட்டுகிறேன். அப்பள்ளிகளுக்கு ஆகும் மொத்தச் செலவில் 50 சதவிகிதத்தை மத்திய அரசாங்கம் ஏற்றுக்கொள்கிறது. மீதி 50 சதவிகிதத்தை ராஜ்ய அரசாங்கமும் அப்பள்ளிகளை நடத்தும் தனிப்பட்ட நிறுவனங்களும் சரிபாதியாக ஏற்றுக்கொள்கின்றன. அதாவது, மொத்தச் செலவில் கால்பங்கைத் தனிப்பட்ட நிறுவனங்கள் ஏற்றுக்கொள்கின்றன. அந்த அந்தத் தனிப்பட்ட நிலையங்கள் 25 சத விகிதத்தை ஏற்றுக்கொள்ளும் கடமையுடையவைகள். தாழையூற்று, விருதுநகர், தஞ்சாவூர், சேலம் முதலிய இடங்களிலுள்ள பல்தொழில் பள்ளிகளைப் பொறுத்தவரையில், அரசாங்கம் செலவில் 25 சத விகிதத்தைத்தான் ஏற்றுக்கொண்டிருக்கிறது. அப்படி இருக்கும்போது, செட்டி நாட்டிலுள்ள அண்ணாமலைப் பல்தொழில் பள்ளியின் செலவில் ஏன் 16½ சத விகிதம் ஏற்றுக்கொண்டிருக்கிறது என்பது தெரியவில்லை.

THE HON. SRI C. SUBRAMANIAM : We are undertaking liability to the tune of 25 per cent. But, if it is put as one-sixth, perhaps that was with reference to some arrangement arrived at before the present arrangement came into effect.

THE HON. SRI R. VENKATARAMAN : I may explain it in this way. It was given under the previous formula under which two-thirds of the expenditure was met by the Central Government. This has now been revised.

* DR. A. CHIDAMBARANATHAN : கனம் அமைச்சர் விளக்கம் கூறியதற்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1959–60-ம் ஆண்டில் பல்தொழில் நுணுக்கப் பள்ளிகள் இன்னும் பல புதுவதாகத் தோன்றும்போது, அவைகள் இந்தப் புதிய சலுகைக்கு உரியனவாகுமா ? அவைகள் இந்தச் சலுகைக்கு உரியன ஆகுமானால் முன்னரே சலுகை கொடுக்கப்பட்ட நிலையங்கள் மறுபடியும் சலுகை கோரி விண்ணப்பித்துக்கொள்ளும் பட்சத்தில், அவைகளுக்கும் சலுகை அளிக்கப் படுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : What the hon. Member suggests will be disadvantageous to the institutions, because they get two-thirds from the Central Government and one-sixth from the State Government. But, at present we are undertaking a liability of 25 per cent, that is, one-fourth. Therefore, by coming into the arrangement or scheme suggested by the hon. Member, they will be under a disadvantage.

*DR. A. CHIDAMBARANATHAN : கல்வித் துறையில் அரசாங்கத்தால் செய்யப்படும் இந்தச் செலவுகளுக்காக, கனம் கல்வி அமைச்சரை நான் மிகவும் போற்றுகிறேன்.

மேலும், உயர்தரப் பள்ளிக்கூடங்களிலுள்ள மாணவர்கள் மாவட்ட நிலையிலும் மாநில நிலையிலும் பல விளையாட்டுப் பந்தயங்களிலும் போட்டிகளிலும் கலந்துகொள்வதற்கு வாய்ப்பளிக்கும் திட்டம் புதுவதாகக் கொண்டுவரப்படுகிறது. இந்தத் திட்டம் மாணவர்களிடையே ஒற்றுமையை வளர்க்க உதவும். இந்தப் பந்தயங்களும் போட்டிகளும் உயர்தரப் பள்ளிக்கூடங்களில் மாணவர்களுக்குத் தனியாகவும், மகளிர்க்குத் தனியாகவும் நடத்தப்படவிருக்கின்றன. இந்தத் திட்டம் நன்றாகச் செயற்படுவதற்குப் பயணப்படி கொடுப்பது பொருத்தமானதே. கல்லூரிகளுக்கும் இந்தத் திட்டத்தைக் கொண்டுவர கனம் அமைச்சரவர்களை வேண்டுகிறேன். இத் திட்டத்தை இந்த ஆண்டு கல்லூரிகளுக்குக் கொண்டுவர முடியாது. அடுத்த ஆண்டிலாவது இதைக் கல்லூரிகளுக்கும் கொண்டுவர வேண்டுமென்று கனம் அமைச்சரை வேண்டிக்கொள்கிறேன்.

பொது சுகாதாரம் என்ற தலைப்பில், மலேரியா தடுப்புத் திட்டம் இனி மேல் மலேரியா ஒழிப்புத் திட்டமாக மாற்றப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது அதற்காக 16,69,100 ரூபாய் செலவிடப்படவிருக்கிறது. அதில் 9,57,000 ரூபாய் பணத்தை மத்திய அரசாங்கத்திடமிருந்து பெறலாம். இத்திட்டத்திற்கு மத்திய அரசாங்கத்திடமிருந்து பணம் கிடைக்கிறது என்பதால், நிரம்பிய ஆர்வத்தில் திட்டத்தை நிறைவேற்றும்போது, புதிய நோய்களைக் கிளப்பிவிடக் கூடாது என்று அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறேன். தஞ்சாவூர் மாவட்டத்தில், சிறப்பாக கும்பகோணத்தில், மலேரியா ஒழிப்புத் திட்டம் புது நோய்களைக் கிளப்பிவிட்டிருப்பது கண்கூடு. அங்கே இப்போது மலேரியா காய்ச்சல் வராவிட்டாலும், கபவாத காய்ச்சல் போன்ற நோய்களால் மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். சில மாவட்ட அதிகாரிகள் இத்திட்டத்திற்காக அரசாங்கத்தார் ஒதுக்கும் பணத்தை 6–7 மாதங்களில் செலவழிக்காமல் இருந்துவிட்டு, பிறகு, இப்பணத்தை
4-20 p.m. எப்படியாவது செமித்துவிட வேண்டுமென்ற எண்ணத்தில், கடைசி இரண்டு மாதங்களில் அவசர அவசரமாக ஏராளமான மருந்துகளை உபயோகிக்கத் தலைப்படுகிறார்கள். அதனால் எதிர்பார்க்கிற நன்மை கிடைக்காமல் தீமை விளைகிறதென்பது அண்மையில் காணப்பட்ட உண்மை. அதையும் அரசாங்கம் சிந்திக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். அதன் காரணமாக, வருடம் நெடுகப் பரவலாக, பல மாவட்டங்களிலும் அந்தப் பணத்தைச் செலவிட வேண்டுமென்று அதிகாரிகளுக்கு உத்தரவு போடவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

17th September 1958] [Dr. A. Chidambaranathan]

இனி கைத்தொழில் பகுதியில் 20-ம் பக்கத்தில் காணப்படுகிற ஒரு குறிப்புப்பற்றிச் சொல்ல விரும்புகிறேன். இப்போது அமைக்கப்பட்டிருக்கிற ஸ்டேட் கவுன்ஸிலினுடைய வேலைகளில் முக்கியமானதொன்று பல்வேறு வகையான இண்டஸ்டிரியல் ட்ரெயினிங் இன்ஸ்டிட்யூட்ஸ் செண்டர்கள் பற்றிய தேர்வுகளை நடத்துவது என்பது காணப்படுகிறது. அதற்காக "டைரெக்டர் ஆப் இன்டஸ்டிரிஸ் அண்டு காமர்ஸ்" இலாகா சம்பந்தப்பட்ட சிப்பந்திகள் எண்ணிக்கையை அதிகப்படுத்த உத்தேசித்திருப்பதாகவும் காணப்படுகிறது. இப்படி இந்த இனத்தில் ஆகும் செலவைக் குறைக்கக் கூடும் என்பது என் நம்பிக்கை. காரணம் என்னவென்றால் இப்போதே பல்வேறு தரப்பட்ட பரீட்சைகளை சர்வீஸ் கமிஷனரும், அரசாங்கத் தேர்வுகள் அதிகாரியும் நடத்திக்கொண்டு வருகிறார்கள். அவர்களிடமே இந்தத் தேர்வுகளை நடத்தும் பொறுப்பையும் ஒப்படைத்துவிடலாம். அதனால் "டைரெக்டர் ஆப் இன்டஸ்டிரிஸ் அண்டு காமர்ஸ்"-க்கு அதிக சிப்பந்திகளை நியமித்துத் தனியாக அவர்களைவிட்டு இண்டஸ்டிரியல் ட்ரெயினிங் இன்ஸ்டிட்யூட் தேர்வுகளை நடத்தும்படியாகச் செய்யவேண்டிய அவசியம் இல்லையென்று கருதுகிறேன். இதைப்பற்றியும் சிந்திக்குமாறு அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதனோடு இன்னொரு செய்தி. இந்த 20-ம் பக்கத்தில் காணப்படுகிற ஒரு குறிப்பு—ஒருவேளை அச்சுப் பிழையாக இருந்தாலும் இருக்கலாம்—அப்படியே ஒப்புக்கொள்வதானால் பிறகு பணச் செலவு வகையிலும் தணிக்கை வகையிலும் பிழை ஏற்படலாம்.

"The extra cost on account of the employment of the additional staff on the payment of travelling allowance and dearness allowance to the non-official Members of the State Council has been estimated at Rs. 33,100 per annum," என்று இம்மாதிரி இருக்கிறது. ஸ்டேட் கவுன்சிலைச் சேர்ந்த உத்தியோகப் பற்றற்ற மெம்பர்கள் சம்பளம் பெறுபவர் அல்லர். ஆதலால் பஞ்சப்படிக்கு உரியவர் அல்லர். "Dearness allowance" என்று இருப்பது சரியாக இருக்காது என்று நினைக்கிறேன். அவர்களுக்குப் பஞ்சப்படி இருக்க முடியாது. ஏனென்றால் சம்பளம் கிடையாது. நாட்படிதான் இருக்கக்கூடும். ஆகவே அது "டெய்லி அலவன்ஸ்" என்று இருக்கவேண்டுமோ என்பது என் ஐயம். இதைப் பற்றியும் விளக்கவேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்கிறேன்.

(Mr. Chairman in the Chair.)

இனி அரசாங்கம் சில நிலையங்களுக்குப் பணம் கடனாகக் கொடுக்கிறது. XLIII-வது தலைப்பில், 29-வது பக்கத்தில் இது காணப்படுகிறது. இந்தத் திட்டத்தின்படி மெட்ராஸ், திரு. ஆரூரான் சர்க்கரை ஆலைக்காக ஐந்து லட்சம் ரூபாய் கடனாகக் கொடுக்கப்பட்டு 1959-ம் ஆண்டு மார்ச்சு 31-ந் தேதிக்குள் திருப்பி வாங்கப்படும் என்று காணப்படுகிறது. இது பொதுவாக வேளாண்மையைப் பெருக்குவதற்கு, எருக்களை அவர்கள் பெறும்படி செய்கிற முறையில் கடனாக உதவப்படுகிறது என்பதைப் போற்றுகிறேன். ஆனால், அதே நேரத்தில் திரு. ஆரூரான் லிமிடெட் போலவே வேறு சில தொழில் நிலையங்கள் ஏதாவது அரசாங்கத்திடம் கடன் உதவி கோரினாலும், இதேவிதமான தாராள மனப்பான்மையுடன் அரசாங்கம் கடன் உதவி அளிக்க முன்வரவேண்டுமென்று வேண்டுகோளையும் விடுக்கிறேன்.

இன்னொன்று சொல்ல விரும்புகிறேன். இவர்களுக்குக் கடன் கொடுக்கும்போது கடன் தொகையைத் திருப்பி வசூலிக்கத் தக்க வகையில் தக்க பாதுகாப்பான நடவடிக்கைகளையெல்லாம் அரசாங்கம் எடுத்துக்கொள்வார்கள் என்பதில் ஐயமில்லை. தக்க அடமானம் வாங்கியிருப்பார்கள். இருந்தாலும்கூட, நான் இந்த எச்சரிக்கையை விடுப்பதற்குக் காரணம் நான்கைந்து ஆண்டுகளுக்கு முன்னால் எண்ணெய் ஆலை (Oil mill)

[Dr. A. Chidambaranathan] [17th September 1958

ஒன்றுக்குப் பத்து லட்சம் ரூபாய் கடனாக அளித்தார்கள். ஆனால் இன்னமும் அதைத் திருப்பி வசூலிக்க முடியாமல், அந்தப் பணம் குட்டிபோட்டு வட்டியுடன் 14½ லட்சம் ரூபாய் ஆகியுள்ளது. அது நமக்குக் கிடைக்கக் கூடிய நிலைமையிலும் இல்லை. காரணம் கடன் கொடுக்கும்போது என்ன என்ன நடவடிக்கைகளை, பாதுகாப்புகளை எல்லாம் அரசாங்கம் செய்து கொண்டிருக்கவேண்டுமோ அவற்றைச் செய்துகொள்ளாததுதான். அந்த மாதிரியாக இனி ஏற்படாமல் இருக்கத் திரு. ஆரூரான் சர்க்கரை ஆலைக்கு 5 லட்சம் ரூபாய் கடன் கொடுக்கும்போது, தக்க பாதுகாப்புகளை எடுத்துக் கொள்வார்கள் என்று நம்புகிறேன், எடுத்துக்கொள்ளவேண்டும். பிற பல தொழில் நிலையங்கள் உதவி கேட்டாலும் அளிக்கிற முறையில், நமது வரவு செலவுத் திட்டத்தை அமைத்துக்கொள்வது நல்லது. அந்த முறையில் அமைந்திருப்பதற்குப் பாராட்டுகிறேன். செப்டம்பர் மாதத்திற்குள் இந்தத் துணை அறிக்கையைக் கொண்டுவந்திருப்பதைத் திரு. ரஸா கான் ஆட்சேபித்தார்கள். இதுதான் சரியான கணக்குமுறை என்று பாராட்டுகிறேன். இந்தமாதிரியே செலவினங்களைக் கட்டுப்படுத்தி, முன் கூட்டி நிர்ணயித்துக்கொண்டு போகிற நமது வரவு செலவுத் திட்டம் நல்ல முறையில் அமைந்திருக்கிறது என்று பாராட்டி முடித்துக்கொள்கிறேன்.

* SRI A. M. ALLAPICHAI: Mr. Chairman, the hon. Member Mr. Mohamed Raza Khan has made some reference to political sufferers and members of their families. What I wish to impress upon friends like him is this. Let us not consider this question of political sufferers on a party basis. Sir, 2,000 or 3,000 years ago, in Sparta—in Greece—the hero Leonidas defended his country against the Persians and even to-day, his name finds a place in almost every possible literature. Similarly, Joan of Arc defended her country against the British and her name finds a place not only in French literature and history, but in every possible literature and history. What I wish to impress upon the hon. Members of this House is this. Our countrymen—whether they belong to the Congress Party or any other Party—fought against the British imperialism and suffered a great deal. Should we not have some respect, some regard and some appreciation for the work which they have rendered to our country? When some little thing is being done for these people which is very, very scanty, friends on the opposite side raise objections. Sir, this question of political sufferers should not be viewed from any other angle. It should be viewed on some other broader basis. These people who suffered for our country are Indians. They may be Congressmen. But, they are something more than Congressmen. They are heroes. Even today, those people, who fought for us and who got us freedom, are undergoing the greatest possible suffering. Perhaps, my hon. Friend does not know it. When such is the case, I cannot understand my Friend objecting to this small paltry sum which has been provided for them. I cannot agree with him.

SRI MOHAMED RAZA KHAN: May I interrupt the hon. the Deputy Chairman? I did not raise any such objection. This issue has been before the House not only now. It has been there ever

since 1948. I only wanted certain clarification about the definition of 'political sufferer' as to whether a political sufferer would remain so even after he left the Party in power. I only wanted this clarification and nothing more. Let not the hon. the Deputy Chairman read much more than it warrants into my speech.

* SRI A. M. ALLAPICHAI : A political sufferer is a political sufferer whether he is in the Congress Party or not. That is clear. Therefore, no clarification is necessary. I know many people, although they are not in the Congress Party, have enjoyed these concessions or benefits. Somehow, or other even some of us, people belonging to the Congress Party, are sometimes afraid of criticisms which are levelled against us. That is why even when we are doing something very grand, we do it with a certain amount of apology. I do not see any reason why there should be an apology at all. When we are doing the right and correct thing, we must be very firm and definite. On the other hand, we are doing it as if it were something right or wrong. Certainly, we should not do like that. 4-30 p.m.

There are these political sufferers and their families. There may be hundreds, if not thousands, of political sufferers who are not absorbed by this scheme. Therefore, what I wish to urge upon the Government is this. No doubt, they have got their difficulties and limitations. With all that, they must do their best to see that these people also are helped. I want to impress one thing upon everyone. We have to be grateful to our heroes. If we are unworthy of our heroes, that will be a dangerous thing, a degrading thing. We must be grateful to our heroes who have shed their blood and done a job for us. If we are not grateful to them, I think it will be a very bad day for us.

I am glad our Government have made some provision for sports. That is a very good thing. In these days when people are talking of wars, atom bombs and hydrogen bombs, these games will produce a lot of goodwill and happiness. I was a very good wrestler, though I was not very much attached to hockey. We were the old champions in hockey and in wrestling and we can be easily world champions in so many other things. Somehow or other, we are losing our ground in some of these things. We have the world wrestler, India's great wrestler, Gama. Somehow or other, we are not holding that championship. As my hon. Friend Sri Purushotham said, there are indigenous games also like Indian wrestling. We must be very proud of it. It is a nice, beautiful and grand game which does not do any injury to the opponent.

SRI MOHAMED RAZA KHAN : It is your own opinion.

* SRI A. M. ALLAPICHAI : It is everybody's opinion. Indian wrestling is such a grand game. There is another point. The hon. Members Sri Purushotham and Dr. Chidambaranathan suggested that we must extend these games to our college students also. I will go one step further. Besides our college and high school students, there are many other youngsters who do not have the benefit of college or other education. They are also athletes. We must encourage them also. If not now, at least in the future, it has to be done.

These are the few suggestions that I want to give.

* SRI M. PATANJALI SASTRY : Mr. Chairman, Sir, I wish to add a few words with regard to the point of view of the hon. Member Sri Mohamed Raza Khan. The words 'political sufferer' are far too wide in scope. They require some kind of definition. Political sufferer, as the hon. the Deputy Chairman said, is, no doubt, a political sufferer. But it is hardly a sufficient definition for all practical purposes. In that case, we will be unable to know who exactly will have a qualifying claim. I suggest that it may perhaps be made clear that a 'political sufferer' is one who had to go to prison during the freedom struggle and who is indigent or in needy circumstances.

THE HON. SRI C. SUBRAMANIAM : This definition we have adopted.

* SRI M. PATANJALI SASTRY : Then, that is all right. I do not want to say anything else.

* SRI V. V. RAMASWAMI : கனம் தலைவர் அவர்களே, நான் சில வார்த்தைகள் மட்டும் சுருக்கமாகச் சொல்ல விரும்புகிறேன். இப்போது திருச்சி மாவட்டத்திலும், திருநெல்வேலி மாவட்டத்திலும் இருக்கிற செட்டில்மெண்டு முடியவேண்டியிருப்பதனால் அங்கேயிருக்கிற ஆபீசர்களை உயர்த்துவதாகக் கண்டிருக்கிறது. மற்ற மாவட்டங்களிலும் சர்வே நடந்து கொண்டிருக்கிறது, முடியும் தருவாயில் இருக்கிறதென்று சொல்லலாம். அதைச் சீக்கிரம் முடிப்பதற்கு என்ன ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதென்று அறிய விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, மாவட்டத்தில் இருக்கிற ரெவின்யூ அதிகாரிகளுக்கு வண்டி வசதிக்காக, ஜீப் வாங்கிக் கொடுப்பதற்காகத் திட்டம் போட்டிருக்கிறார்கள். ஒவ்வொரு ஆண்டுக்கும் பத்து ஜீப் வாங்குவதாக இப்போது சொல்லப்பட்டிருக்கிறது. பத்து ஜீப் என்று முதல் ஆண்டில் வாங்கினால், அவை இப்போது சொல்லப்பட்டிருக்கிற பட்டியல் வரிசைப்படி முறைப்படி கொடுக்கப்படுமா ? வேறு எந்த இலாகாவுக்கு எந்த அதிகாரிக்கு எல்லாம் கொடுக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

சமுதாய நலத் திட்டத்திலும், தேசீய விஸ்தரிப்புத் திட்டத்திலும் அரசியல் தியாகிகளுக்கு வேலை கொடுக்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. நான் அறிய விரும்புவது என்னவென்றால் எத்தனை அரசியல் தியாகிகள் இருக்கிறார்கள் என்ற கணக்கு எடுக்கப்பட்டிருக்கிறதா ? எடுக்கப்பட்டிருந்தால், அத்தனை பேர்களுக்கும் வேலை கொடுக்கப்படுமா ? எத்தனை பேர்களுக்கு வேலை கொடுக்க முடியும் என்பதை அறிய விரும்பு

கிறேன். அதில் சங்கடங்கள் உண்டாகாதா ? எந்த அடிப்படையில் சிக்கல்கள் எதுவுமின்றி வேலை கொடுக்க முடியும் என்பதை அறிய விரும்புகிறேன். தேசிய விஸ்தரிப்புத் திட்டம், சமுதாய நலத் திட்டம் இவைகள் பொது மக்களுடன் தொடர்பு வைத்துக்கொள்ளக்கூடிய கேந்திரமான பிரசார நிலையங்கள். ஆகவே இவைகளில் தியாகிகளை மாத்திரம் அமர்த்தினால், பிறருக்கு இடமில்லாமல் போய்விடுவதோடு ஒரு கட்சிப் பிரசாரத்திற்குப் பயன்படக்கூடியதாகத்தானிருக்குமென்ற ஐயப்பாட்டுக்கு இடமளிக்கிறது. தியாகிகள் தவிர மற்றவர்களுக்குக் கிடையாதா ? மண்டலக் காங்கிரஸ் கமிட்டியார் சிபார்சுகள் மேல்தான் இந்தப் பதவிகள் வழங்கப்படும் என்ற அச்சம் ஏற்பட்டு வருவதற்குக் காரணம் உண்டா என்றும் அறிய விரும்பு கிறேன்.

அதோடு தொழில் நுட்பக் கல்வியைப் பரப்புவதில் நம் சர்க்கார் நடவடிக்கை எடுத்து வருவதைப் பாராட்டுகிறேன். அரசியலார் இதற்காகத் தனியாக டைரெக்டரேட் வைத்திருக்கிறார்கள். இதே முறை நீடிக்குமா ? அதாவது Chief Engineer P.W.D. is ex-officio Director—இனி சீப் இன்ஜினியர் இல்லாமல் தனியாக டயரக்டர் என்று நியமிக்கப்படுவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாணவர்களுக்கு நம் தேசிய விளையாட்டுகளில் ஆர்வம் உண்டாக்குவதற்காக மாவட்டவாரியாகவும், மாநிலவாரியாகவும் விளையாட்டுப் பந்தயங்கள் வைப்பது மிகவும் வரவேற்கத்தக்கது. இது சம்பந்தமாக ஒன்று சொல்ல விரும்புகிறேன். போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு வெள்ளிப் பதக்கங்களும், நற்சான்றுப் பத்திரங்களும் கொடுக்கப்படப்போவதாகக் குறிப்பிடப் பட்டிருக்கிறது. தேசியச் செல்வங்களாகிய இவர்களை மேலும் மேலும் விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொள்ளும்படி பார்த்துக்கொள்வதற்காக அவர்களுடைய உடல்நிலை கெடாதபடி அரசாங்கம் பார்த்துக்கொள்ள வேண்டும். மேலும், அவர்கள் மேற்படிப்பிற்குப் போவதாக இருந்தாலும், அவர்களுக்கு அரசாங்கம் நிதி உதவி அளிக்கலாம் என்றும் கூற விரும்புகிறேன். 4–40 p.m.

அடுத்தபடியாக, விருதுநகரிலுள்ள ஆஸ்பத்திரியை இப்போதுள்ள இடத்திலிருந்து வேறொரு கட்டிடத்திற்கு மாற்ற வேண்டுமென்று அங்குள்ள மக்கள் சொல்லிவந்திருக்கிறார்கள். வேறு நல்ல கட்டிடத்திற்கு அதை மாற்றுவதற்கு லட்ச ரூபாய் நன்கொடை கொடுக்க ஒரு தனி நபர் முன் வந்திருக்கிறார். இதுபற்றிக் கனம் அமைச்சரிடம் தெரிவிக்கப்பட்டது. ஆனால் கனம் அமைச்சர் இதுபற்றி இந்த அறிக்கையில் குறிப்பிடவில்லை.

THE HON. SRI C. SUBRAMANIAM : உப—மானிய கோரிக்கை அறிக்கையில் இல்லாததைப் பற்றிக் கனம் அங்கத்தினர் பேசக் கூடாது.

* SRI V. V. RAMASWAMI : விருதுநகர் ஆஸ்பத்திரி சம்பந்தப்பட்ட இந்த விஷயத்தை அரசாங்கம் கவனிக்கும் என்று எதிர்பார்க்கிறேன்.

அடுத்தபடியாக, ராமநாதபுரம் ஜில்லாவில் சமீபத்தில் கலவரம் நடந்த இடங்களில் சாலைகள் போடுவதற்காக ராமநாதபுரம் ஜில்லா போர்டிற்கு அரசாங்கம், 6,82,100 ரூபாய் மானியம் கொடுக்கிறது. இந்த சந்தர்ப்பத்தில் ஒன்று சொல்ல விரும்புகிறேன். நிலங்களை ஸர்வே செய்வதற்கான செலவை ஜில்லா போர்டுகள் ஏற்க வேண்டுமென்று அரசாங்கத்தார் சொல்லியிருக்கிறார்கள். அந்தச் செலவையும் அரசாங்கத்தாரே ஏற்க வேண்டுமென்று ஜில்லா போர்டு கேட்டுக்கொண்டிருக்கிறது. அதை அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கீழ் பவானி, அமராவதித் திட்டப் பிரதேசங்களில் பூங்காக்களை அமைத்து நடத்துவதற்குத் திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டத்திற்கு அரசாங்கம் பணம் கொடுக்கிறது. மேலும், சாத்த

ஹாரிலுள்ள பூங்காவை அபிவிருத்தி செய்ய வேண்டும். அந்தப் பூங் காவைப் பார்த்துப் போக வரும் வெளியூர் மக்களுக்கும், தேக்கத்தில் வேலை செய்யும் ஆட்கள் தங்களுக்கு வேண்டிய சாமான்கள் வாங்குவ தற்கும் அடிக்கடி திருவண்ணுமலை போய் வர வேண்டியதாயிருக்கிறது. அவர்கள் அப்படி திருவண்ணுமலை போய் வருவதற்குப் போதுமான பஸ் வசதி, ஸ்டோர் வசதி முதலியன இல்லை. இதைக் கவனித்து ஆவன செய்ய வேண்டுமென்று அரசாங்கத்தாரைக் கேட்டுக்கொண்டு என் வார்த்தையை முடித்துக்கொள்ளுகிறேன்.

* **Sri A. SUBRAMANYAM** : மதிப்பிற்குரிய தலைவர் அவர் களே, உபச் செலவுகளுக்காகப் பணம் கோரும் கனம் அமைச்சரின் கோரிக்கையை ஆதரித்துச் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

இன்று கனம் அங்கத்தினர் ஸ்ரீ ரஸா கான் அவர்களும், மதிப்பிற் குரிய ஸ்ரீ சிதம்பரம் செட்டியாரும், மிகவும் மதிப்பு வாய்ந்த ஸ்ரீ பதஞ்சலி சாஸ்திரி அவர்களும் ஒரு குறிப்பிட்ட விஷயம் பற்றி எவ்வளவோ பேசி ஞர்கள். அரசியல் தியாகிகளுக்கு சர்க்கார் சில சலுகைகள் அளிப்பது பற்றி அவர்கள் பேசினுர்கள். நான் பல தடவை சிறை சென்றிருக்கிறேன். நான் சிறை சென்று பல கஷ்ட நஷ்டங்கள் அடைந்திருக்கிறேன். அந்த முறையில் நான் இது சம்பந்தமாகச் சில வார்த்தைகள் சொல்ல விரும்பு கிறேன். இம்மாதிரியான உதவிகளை சர்க்கார் அரசியல் தியாகிகளுக்கு அளிப்பது அவசியமா அவசியமில்லையா என்று. . . .

**The Hon. Sri C. SUBRAMANYAM** : அரசியல் தியாகிகளுக்கு இவ்வாறு உதவி அளிப்பது தவறு என்று அவர்கள் குறிப்பிடவில்லை. ஆனல் இத்தகைய உதவிகளுக்குச் சில வரையறைகள் இருக்கவேண்டும் என்றுதான் அவர்கள் சொன்னுர்கள். அது ரொம்ப சரி.

* **Sri A. SUBRAMANIAM** : அதை நான் சந்தோஷத்துடன் ஏற்றுக் கொள்ளுகிறேன். இதில் வரையறை எவ்வளவு தூரம் இருக்கவேண்டும் என்பது குறித்து அவர்கள் கூறுவதில் எனக்குச் சந்தேகம் இருக்கிறது.

வெள்ளையர் இந்த தேசத்தை ரொம்ப காலம் ஆண்டு வந்தார்கள். அப்போது நம் நாட்டு மக்கள் சிப்பாய்களாக இருந்தார்கள். அப்போது நம் நாட்டு மக்கள் சேனையில் உத்தியோகங்கள் பார்த்து வந்தார்கள். அவர்கள் சேனையில் இலவசமாக உத்தியோகம் பார்க்கவில்லை. அவர் களுக்கு வெள்ளையர்கள் தகுந்த ஊதியம் கொடுத்தார்கள். அத்துடன் அவர்களுக்கு " காப்டன் ", " மேஜர்-ஜெனரல் ", " லெப்டிணண்ட்-கர்னல்" என்ற பட்டங்களையெல்லாம் கொடுத்தார்கள். அவைகளையெல்லாம் வெள் ளையர்கள் நம் நாட்டு மக்களுக்குக் கொடுக்க ஆரம்பித்த பிறகு, நம் நாட்டு மக்கள் ஏராளமான எண்ணிக்கையில் சேனையில் சேர முன்வந்தார் கள். அதற்கு முன்பு அவ்வளவு மக்கள் அவ்வாறு முன்வரவில்லை. அவர்கள் வெள்ளைக்காரர்களிடம் கூலிக்கு மாரடித்தார்கள் என்பதை எடுத்துக்காட்டுவதற்காக இதை நான் சொல்லுகிறேன். அவர்களுக்கு உத்தியோகங்களுக்குத் தகுந்தவாறு ஊதியமும் பட்டமும் கொடுக்கப்பட்டது. ஆனல் அரசியல் தியாகிகள் காந்தியின் அடிச்சுவட்டைப் பின்பற்றி தேச விடுதலைக்காக அஹிம்ஸைப் போர் நடத்தியிருக்கிருர்கள். அவர்கள் சொல் லொணுக் கஷ்டங்கள் அனுபவித்திருக்கிருர்கள். காந்திஜியின் அஹிம் ஸைத் தத்துவப்படி தொண்டர்கள் சாத்வீகப் போரில் ஈடுபட்டார்கள். " வந்தே மாதரம் என்று சொன்னல், கை விரலை வெட்டுவேன் " என்று வெள்ளைக்காரன் கூறினுன். " வேண்டுமானல் இரண்டு விரல்களை வெட்டிக் கொள். அப்பொழுதும் வந்தேமாதரம் என்று சொல்லத்தான் செய்வேன். எல்லா விரல்களையும் வெட்டினுலும் வெட்டிக்கொள். வந்தே மாதரம் என்று சொல்லத்தான் செய்வேன். ஒரு கையையே வெட்டுவாயானுலும் வெட்டிக்கொள். வந்தே மாதரம் என்று சொல்லத்

தான் செய்வேன். வேண்டுமானால் தலையையே வெட்டிக்கொள் " என்று கூறும் முறையில் அவர்கள் தேச விடுதலைக்காகப் போராடியிருக்கிறார்கள். பணத்தையும் பொருளையும், உயிரையும் தியாகம் செய்திருக்கிறார்கள். பிற்காலத்தில் உத்தியோகம் கிடைக்கும் என்றோ, பதவி கிடைக்கும் என்றோ அவர்கள் எதிர்பார்க்கவில்லை. பிரதிபலனை எதிர்பார்க்காமல் அப்போது அவர்கள் தியாகம் செய்தார்கள். அந்தக் காலத்தில் நான் சிறை சென்ற போது பல கஷ்டங்களை அனுபவித்தேன். என்னைப் போலீசார் கோட்டைக்கு முன்பு அடித்துப் போட்டுவிட்டுப் போய்விட்டார்கள். மூன்று நாட்கள் பிரக்ஞை இல்லாதிருந்தேன். அப்போது, சட்டசபை அங்கத்தினனாக வருவேன் என்று நான் எதிர்பார்த்தேனா ? இல்லை. ஆனால், 1937-லிருந்து இன்று வரை நான் சட்டசபை அங்கத்தினனாக இருந்து வருகிறேன். இந்தியப் பிரதமராக இருக்கும் ஸ்ரீ நேரு அவர்கள் தான், தமக்குப் பிரதமர் பதவியை யாராவது கொடுப்பார்கள் என்று எதிர்ப்பார்த்தா சுதந்திரப் போரில் ஈடுபட்டார்கள் ? நமது முதலமைச்சர் ஸ்ரீ காமராஜர், தாம் முதலமைச்சராக வரலாம் என்று எதிர்ப்பார்த்தா தேச விடுதலைக்காகப் போராடினார்கள் ? இல்லவே இல்லை. இந்தியக் குடியரசின் தலைவராக இருக்கும் டாக்டர் ராஜேந்திரப் பிரசாத் அவர்கள் தனக்கு ஜனாதிபதிப் பதவி கிடைக்கும் என்று எதிர்பார்த்து சுதந்திரப் போரில் குதித்தாரா ? நாட்டு மக்கள் அடிமை வாழ்வினின்றும் விடுதலை பெற வேண்டும். நாடு க்ஷேமமுற வேண்டும் என்ற நல்லெண்ணத்துடன் அவர்கள் தன்னலம் பாராது போராடினார்கள். தியாகிகளுக்கும் தியாகிகளின் குடும்பத்தினருக்கும் இப்போது அரசாங்கத்தார் உதவிகளும், சலுகைகளும் கொடுத்து வருகிறார்கள். இதை நாம் பாராட்ட வேண்டும். வெள்ளையரின் சேனையில் வேலை செய்தவர்களுக்குப் பெரிய பெரிய பட்டங்களும் பெரிய சலுகைகளும் கொடுக்கப்பட்டன. அப்படியிருக்கும்போது யாதொரு பிரதி பிரயோஜனத்தையும் எதிர்பாராது விடுதலைக்காகப் போராடியவர்களுக்கு இப்போது கொடுக்கப்படும் சலுகைகள் ஒன்றும் பெரியதல்ல. தேச விடுதலைக்காகப் போராடிய தியாகிகளுக்கும் அவர்களுடைய குடும்பத்தினருக்கும் இப்போது சமூக நல ஊழியர்கள் உத்தியோகத்தைக் கொடுக்க அரசாங்கத்தார் முன்வந்திருப்பது பாராட்டத்தக்கது. இதை ஆட்சேபிக்கக் கூடாது. இப்பொழுது நம் நாட்டில் ஜனநாயக ஆட்சி நடக்கிறது, நல்லாட்சி நடக்கிறது. அடுத்தாற்போல், ரஷ்யாவை எடுத்துக்கொள்வோம். அங்கே புல்கானினின் கதி என்னவாயிற்று ? இந்த நாட்டில், இந்த நாட்டிற்குச் சுதந்திரம் வேண்டாம் என்று சொன்னவர்களுக்குக்கூட இப்போது பல நன்மைகள் செய்திருக்கிறோம். நாம் பாரபட்சம் காட்டுவதில்லை. வெள்ளைக்காரனிடம் காட்டிக்கொடுத்துச் சுதந்திரம் வேண்டாம் என்று சொன்னவர்களைப் போன்ற நபர்கள் ரஷ்யாவில் இருந்திருந்தால், அவர்கள் தூக்கிலிடப்பட்டிருப்பார்கள். நாம் அவ்வாறு நடந்துகொள்ளவில்லை. இது குறித்து நான் சந்தோஷப்படுகிறேன். அரசியல் தியாகிகளுக்குச் செலுத்த வேண்டிய மரியாதையை நாம் செலுத்த வேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொண்டு என் வார்த்தையை முடித்துக் கொள்கிறேன்.

* **Sri G. KRISHNAMOORTHY** : கனம் தலைவர் அவர்களே, இந்த உபரி வரவு செலவுத் திட்டத்திலே அனேக புதுத் திட்டங்களுக்குப் பண வசதி செய்யப்பட்டிருக்கிறது. அவைகளில் இரண்டு-மூன்று திட்டங்கள் நமது விசேஷ கவனத்திற்குரியவை என்பது என் தாழ்மையான அபிப்பிராயம். இந்தக் கோரிக்கைப் புத்தகத்தின் 13-வது பக்கத்தில், குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்திற்காகப் பணம் ஒதுக்கப்பட்டிருப்பது குறிப்பிடப்பட்டிருக்கிறது. குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்திற்காக சர்க்கார் பெரிய அளவு பணத் தொகை ஒதுக்கும் அளவிற்கு, குடும்பக் கட்டுப்பாடானது சர்க்காரின் கவனத்தைக் கவர்ந்திருப்பது எனக்கு ஆச்சரியத்தை உண்டாக்குகிறது. இந்தியா ஆங்கிலேயர்களுக்கு அடிமை நாடாக இருந்தபோதும், அதற்கு முன்பும் மற்ற நாடுகளின் கவனம் அதன்

[Sri G. Krishnamoorthy] [17th September 1958

மேல் விழுந்ததற்குக் காரணம் அதன் ஜனத்தொகையே. இந்தியாவின் ஜனத்தொகை உலகத்தின் மொத்த ஜனத்தொகையில் 1/5 பங்கு ஆகும். அதாவது, சுமார் 200 கோடியில் சுமார் 40 கோடி ஆகும். இப்போது இந்தியா எல்லா தேசங்களாலும் பெரிதும் மதிக்கப்படுவதற்கு, இந்தப் பெரிய ஜனத்தொகையும் ஒரு காரணம் ஆகும். இந்தப் புள்ளி விவரங்களை வைத்துக்கொண்டு சர்க்கார் ஜனத்தொகையானது ஏறிவருகிறது, பிறப்பு ஜாஸ்தி, இறப்பு குறைச்சல், ஆகவே செயற்கை முறையில் பிறப்பைக் கட்டுப்படுத்த வேண்டும் என்பதற்காக—பாபகரமான செயல்களில் ஜனங்கள் ஈடுபட ஏன் இந்த சர்க்கார் செலவழிக்க வேண்டும் என்று தெரியவில்லை. கடவுள் கொடுத்த சொத்து நிலம். வேண்டுவோருக்கு வேண்டும் பொருள் கொடுக்கக் கூடியது. அதனாலேயே இதற்குப் பூமி என்று பெயர். அது எல்லோருக்கும் உணவு கொடுக்கிறது. அப்படியிருக்க இந்தப் பூமியில் அதிக உற்பத்திக்கு ஏராளமான இடம் உண்டு. அதைப்
4-50 p.m. பெரிய அளவில் செய்யாமல் பிறப்பைக் கட்டுப்படுத்த சர்க்கார் பணம் செலவிடுவது, அதுவும் மக்கள் பணத்தை எடுத்தே மக்களின் பெருக்கத்தைத் தடைப்படுத்தும் காரியங்களில் இறங்குவது மிகவும் விந்தையாக இருக்கிறது. உணவைப் பெருக்குவதற்கு எல்லாவிதமான நடவடிக்கைகளையும் எடுத்துக் கொள்ளாது, குடும்பக் கட்டுப்பாடு செய்தால்தான் எல்லோருக்கும் உணவுக் கஷ்டம் இல்லாமலிருக்கும் என்று சொல்வது சரியல்ல. இது சாஸ்திர விரோதமான காரியம். பாபமான கிருத்தியம், காந்திஜியின் கொள்கைக்கு விரோதமானது. ஆகவே குடும்பக் கட்டுப்பாட்டுக்காக சர்க்கார் பணத்தைச் செலவிடுவதும், 15 ரூபாய் கொடுத்து உதவுவதாக அறிவித்திருப்பதும் சரியாகாது. அதுவும் திடீரென்று எய்டெட் ஸ்கூல் டீச்சர்களையும் Public Employees உடன் சம அந்தஸ்தில் சேர்த்து இந்த ஆபரேஷனைச் செய்து கொண்டால் 15 ரூபாய் அலவன்சு கிடைக்கும் என்பதாகச் சேர்த்திருக்கிறார்கள். திடீரென்று சர்க்கார் கடாக்ஷம் எய்டெட் ஸ்கூல் டீச்சர்களின் பேரில் விழுந்தது ஆச்சர்யமாயிருக்கிறது. மெடிகல் கன்ஸெஷன் கொடுத்த போதும், வீட்டு வாடகைப்படி கொடுத்த போதும் இந்த டீச்சர்களைச் சேர்த்துக்கொள்ளவில்லை. பென்ஷன் திட்டத்தின்போது பென்ஷன் பணம் Commutation மொத்தப் பணம் வாங்கும்படி சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று சொன்னபோதும் ஒப்புக்கொள்ளவில்லை. குடும்பக் கட்டுப்பாட்டு விஷயத்தில் இந்தப் 15 ரூபாய் எய்டெட் ஸ்கூல் டீச்சர்களுக்கும் உண்டு என்று அறிவித்திருக்கிறார்கள். இதன் காரணம் தெரியவில்லை.

அடுத்தபடியாக, பள்ளிக்கூடங்களில் உள்ள மாணவ மாணவிகள் விளையாட்டுப் பந்தயங்களில் ஈடுபட ஜில்லா லெவலிலும், மாகாண லெவலிலும் உதவுவதற்காகப் பணம் ஒதுக்கியிருப்பதைப் பாராட்டிப் பலர் பேசினார்கள். நானும் வரவேற்கவேண்டியவன் தான். ஆனால் இன்றைய தினம் எத்தனையோ விளையாட்டுப் பந்தயங்கள் ஆங்காங்கே பள்ளிகளில் நடந்துகொண்டிருக்கும்போது, மாகாண லெவலில் நடைபெறுவதற்குப் பிரயாணப்படிக்காகவும், இதரச் செலவுக்காகவும் ஒரு லட்சம் ரூபாய் இப்போது ஒதுக்குவது அவசியந்தானா என்பதைச் சிந்திக்க வேண்டாமா? அதற்குப் பதிலாக அங்கப்ப நாயக்கன் தெருவிலும், பங்கிங்காம் கால்வாய் கரையோரங்களிலும் குடியிருந்து அவதிப்பட்டுக்கொண்டிருக்கிற ஏழை மக்களுக்குக் குடிசை ஒன்றுக்கு 100 ரூபாய் வீதம் செலவழித்து வீட்டு வசதி செய்து கொடுப்பதானால், வருடம் நூறு குடும்பங்களுக்கு வசதி செய்து கொடுக்க முடியாதா ? மக்கள் உணவு வசதியின்றி, வீட்டு வசதியின்றி அல்லல்பட்டுக்கொண்டிருக்கும்போது, விளையாட்டுக்காகப் பணம் ஒதுக்கி செலவழித்துக் கொண்டிருக்கலாமா ? இது அவசியம் தானா என்று கேட்க விரும்புகிறேன்.

**Sri A. M. ALLAPICHAI :** Why should we have education ? Why should we spend so much on education, to-day Sir ?

17th September 1958]

***Sri G. KRISHNAMOORTHY** : உப-தலைவர் அவர்களுக்கு நான் சொல்வது இது தான். அவசியமானது தவிர்க்க முடியாதது. இது அப்படிப்பட்டது அல்ல என்பதைத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

முப்பது ஜீப் கார்கள் வாங்கப் போவதாகவும், ரெவினியூ டிபார்ட் மெண்டுக்கு மட்டும் 50 ஜீப்கள் தேவையாக இருப்பதாகவும் சொல்லப்பட் டிருக்கிறது. அதற்கு பராமரிப்புச் செலவு என்ன ? இப்போது எல்லா டிபார்ட்மெண்டுகளிலும் சேர்ந்து எவ்வளவு ஜீப்கள் இருக்கின்றன ? அவர் கள் பிரயாணம் செய்வதனால் உண்டாகும் நன்மை என்ன ? செல விற்குத் தகுந்த பிரயோஜனம் உண்டா ? இவை எல்லாவற்றையும் விளக்கினால் தேவலை.

கடைசியாக, அரசியல் தியாகிகளுக்கு உத்தியோகம் கொடுப்பதைப்பற்றி மறுக்கவில்லை. ஆனால் அவர்களுக்காவது ரூ. 45—3—60—5—90 என்று செய்திருக்கிறார்களே என்று பாராட்டுகிறேன். லோயர் டிவிஷன் குமாஸ் தாக்களுக்கும், செகண்டரி கிரேடு ஆசிரியருக்கும் ரூ 45—3—60—2—90 என்று தான் வைத்திருக்கிறார்கள். மேலே போகப்போக உயர்த்து வதற்குப் பதிலாக மூன்று கூட இரண்டாக மற்றவர்கள் விஷயத்தில் இருக்கிறது. இவர்கள் விஷயத்தில் ரூ. 50—5—90 என்று செய்திருப் பதைப் பாராட்டுவதோடுகூட அதுபோல் மற்றவர்கள் விஷயத்திலும் மாற்ற வேண்டும் என்பதாகக் கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்ளுகிறேன்.

***Sri K. M. RAMASAMY GOUNDER** : கனம் சபாநாயகர் அவர்களே, வரவு செலவுத் திட்டத்தை யொட்டிப் பேசுவதற்கு எனக்கு சந்தர்ப்பம் கிடைத்தமைக்குச் சந்தோஷப் படுகிறேன். பல மெம்பர்கள் பலவிதமான சர்ச்சைகளில் இப்போது ஈடுபட்டிருந்தார்கள். சாதாரண மாக இப்போது விளையாட்டுக்குப் பணம் ஒதுக்குவது நியாயமா ? சர்க்கார் கவனிக்க வேண்டிய வேறு பல விஷயங்கள் இல்லையா ? நம் மக்கள் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கும்போது, இந்த இனத்தில் பணத்தைச் செல விடலாமா என்று எனக்கு முன் பேசிய மெம்பர் கேட்டார். எது அவசியம், எது அவசரம் என்பதைக் கவனித்துச் செலவழிக்க வேண்டும் என்றார்கள். நாம் அவர் நினைக்கிறது போல, மிகவும் பஞ்ச நிலையில் இல்லை. நம்முடைய வரவு செலவுத் திட்டமும் அத்தனை நெருக்கடியான நிலை மையில் இருப்பதாக ஒப்புக்கொள்ள முடியாது. ஓரளவு புதுக் கட்டிடங் களுக்கு முக்கியமான காரியங்களுக்குப் பணம் ஒதுக்க வேண்டியது தான். அதே சமயம் இப்படிப்பட்ட உயர்ந்த முறையில்—மாணவர்களுடைய ஆரோக்கியத்திற்கு ஊக்கமும் ஆக்கமும் அளிக்கும் விளையாட்டுகளில் பணம் செலவிடாமலும் இருந்துவிட முடியாது. மேலும், நாம் இப்போது ஒதுக்கியிருக்கும் தொகையும் பெருந்தொகை என்று சொல்லிவிட முடி யாது. அதோடு முக்கியமாக நாம் கவனிக்க வேண்டியது புதிதாகப் பள்ளிக்கூடம் ஆரம்பிக்க அனுமதி கோரி விண்ணப்பங்கள் வந்தால் அவைகளை முடிவு செய்வதில் சர்க்கார் போக்கு ஒரு விதமாக இருப்பதே ஆகும். அதுவும் ஒரேமாதிரியான நடவடிக்கை எல்லா இடங்களிலும் எடுத்துக்கொள்ளப்படுவதாகத் தெரியவில்லை. இப்போது பொதுவாக உயர் நிலைப் பள்ளிகள், பயிற்சிப் பள்ளிகள் ஆரம்பிக்க இடம் கொடுப்பதில்லை. அனுமதி கொடுத்தால் போதும். இது கொடுப்பதில்லை. ஏதோ காரணங் கள் ! அருகாமையில் வேறு ஒரு பள்ளிக்கூடம் இருப்பதாகச் சொல்லி விடுகிறார்கள். இதுவெல்லாம் சரியான காரணங்கள் ஆகா. ஐந்து மைல் சுற்றளவுக்குள் ஓரிரண்டு பள்ளிக்கூடங்கள் இருக்கலாம். அதிக தூரம் மாணவர்கள் நடக்கும்படியாக விடக் கூடாது. நிறையப் பள்ளிக்கூடங்கள் ஆரம்பிக்கவேண்டும். ஜில்லா போர்டுகளே அதிக உயர்நிலைப் பள்ளிகளை ஆரம்பிக்கவேண்டும். தனியார் பள்ளிகள் நடத்த முன்வந்தால் அனுமதி மறுப்பது போய், ஆதரவு தருகிற நிலைமை கல்வி இலாகாவில் நிலவ வேண்டும்.

அதோடு இன்னொரு விஷயம். ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி அவர்கள் கொண்டுவந்த தீர்மானம் எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் உள்ள உபாத்தியாயர்களின் சம்பள விகிதங்கள் ஒரே மாதிரியாக இருக்க வேண்டும் என்பது இங்கே தோற்றது வருந்தத்தக்க விஷயம். அப்படி அந்தத் தீர்மானம் தோல்வியுற்றாலும் கூட, ஒரே மாதிரியான நிலை ஏற்படுத்துவதை முதல் கடமையாக அரசாங்கத்தார் கொள்ள வேண்டும். சர்க்கார் கொடுக்கிற உதவி எல்லாப் பள்ளிக்கூடங்களுக்கும் ஒரே மாதிரியாக இருக்க வேண்டும். அதோடு பல பள்ளிக்கூடங்களில் மாதாமாதம் உபாத்தியாயர்களுக்குச் சம்பளம் கொடுப்பதில்லை. திருப்பத்தூர் ராமகிருஷ்ண பள்ளியில் ஐந்தாறு மாதங்களாகச் சம்பளம் வரவில்லையென்று புகார் சொல்கிறார்கள். இன்னும் இதுமாதிரியாக அநேக பள்ளிக்கூடங்கள். ஏழைப் பள்ளி ஆசிரியர்களுக்குச் சம்பளம் கூடக் கொடுக்கப்படுவதில்லை யென்றால், அவர்கள் என்ன செய்வார்கள் ? பள்ளிகளில் ஒழுங்காக ஆசிரியர்களுக்குச் சம்பளம் கொடுக்கப்படுவதற்கு வேண்டிய நடவடிக்கையை சர்க்கார் எடுத்துக்கொள்ள வேண்டுமென்பதாகக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கிராம அபிவிருத்தி சம்பந்தமாக அநேக பிளாக் டெவெலெப்மெண்டுகள் இருக்கின்றன. அதிகாரிகள் நிறைய நியமிக்கப் படுகிறார்கள். உதாரணமாக எண்ணெய் அபிவிருத்தி அதிகாரி என்று விவசாயத்தில் பி.எஸ்.ஸி. பட்டம் பெற்ற ஒருவரை நியமிக்கிறார்கள். வட்டார வளர்ச்சி ஆபீஸில் விதைப் பொருள்கள் விற்பனைக்குக் கிடையாது. வேறு இடங்களிலிருந்து வாங்கித் தருவதில்லை. இந்திய சர்க்காரோ, ராஜ்ய சர்க்காரோ ஓரளவாவது விதைப் பண்டங்களை விநியோகம் செய்யஇயலவில்லை என்றால் அந்த அதிகாரிகளை மட்டும் நியமித்து விடுவதில் என்ன பிரயோஜனம் இருக்க முடியும்? இந்தமாதிரி உத்தியோக ஸ்தானங்களை
நமது அரசாங்கத்தார் அப்பாலைவனத்தைச் சோலைவனமாக்கவே முயன்று வருகிறார்கள். நல்லாட்சியில் பஞ்சமோ, லஞ்சமோ கொஞ்சமும் இருக்கக்கூடாது. இந்த நோக்கம் ஈடேற வேண்டுமானால் நாட்டில் குறைவிலாத விளைபொருள்கள் இருக்க வேண்டும். எனவே தான் அரசாங்கத்தார் பாலைவனங்களைச் சோலை வனங்களாக்க முயற்சி செய்து வருகிறார்கள். ஐந்து ஆண்டுத் திட்டங்களின் அடிப்படைத் தத்துவமே அது தான். உணவு தானிய உற்பத்தியை அதிகரிப்பதற்காகத்தான், சமூக நலத் திட்டங்களையும் வட்டார அபிவிருத்தித் திட்டங்களையும் அரசாங்கத்தார் நிறைவேற்றி வருகிறார்கள். இது குறித்து நான் மகிழ்ச்சியடைகிறேன்.

1953-ம் ஆண்டு, ஆந்திராப் பிரிவினையின்போது நம் ராஜ்யத்தில் உணவுப் பற்றாக்குறை அதிகமாக இருந்தது. நமது ராஜ்யத்தில் 1956–57-ல், 46·22 லட்சம் டன்னும், 1957–58-ல் 46·58 லட்சம் டன்னும் உணவு தானியங்கள் உற்பத்தியாயின. இப்போது நம்மிடம் ·36 லட்சம் டன் உணவு தானியங்கள் உபரியாக இருக்கின்றன. இதுவும் முடிவான நிலை அல்ல. வருட இறுதியில் நிலைமை மாறக்கூடும். தென்மேற்குப் பருவக்காற்று மிகவும் அனுகூலமாயிருந்தது. வட கிழக்குப் பருவ மழையும் அனுகூலமாயிருக்கும் என்று எதிர்பார்க்கிறோம். குறுவைப் பயிர் அக்டோபரில் கிடைக்கும்போது அரிசியின் விலை குறையக்கூடும் என்று எதிர்பார்க்கிறோம். நம்பிக்கையுடன்தான் வாழவேண்டும். நம்பிக்கை தான் வாழ்வை வளப்படுத்தும்.

இந்த நிலைமையில், தென் உணவு மண்டலத்தில் நமது ராஜ்யம் இருப்பதுதான், நமது ராஜ்ய உணவு நெருக்கடிக்குக் காரணம் என்று தெரிவிக்க விரும்புகிறேன். சென்னை மாத்திரம் ஒரு தனி மண்டலமாக இருந்திருந்தால், இந்த நெருக்கடி ஏற்பட்டிருக்காது. இப்போது, ஆந்திராவில் உணவு தானியங்கள் அதிகமாக இருக்கின்றன ; மைசூரில் உணவு தானியங்கள் போதிய அளவு இருக்கின்றன ; கேரளாவில் தான் உணவு தானியங்கள் குறைவாக இருக்கின்றன. கேரளாவில் பற்றாக் குறை இருப்பதால்

17th September 1958] [Vidwan T. Muthukannappan]

தான் நமக்கு சிக்கல்கள் வருகின்றன. முன்பெல்லாம் நாம் பிறருக்குத் தாராளமாக வழங்கி வந்தோம்; அப்போது நம்மால் அது முடிந்தது. இப்போது நாம் அவ்வளவு நல்ல நிலைமையில் இல்லை. எனவே, இனிமேல் " தனக்கு மிஞ்சித் தான் தானம் " என்ற பழ மொழிக்கிணங்க நாம் நடந்துகொள்ள வேண்டும். இருந்தாலும், இப் போது நமக்கு உபரியாக இருக்கும் 2½ லட்சம் டன் உணவு தானியங்கள் தான் கேரளாவிற்கு அனுப்பப்படுகிறது. நபருக்கு நாளொன்றுக்கு உணவு தானிய அளவு 16 அவுன்ஸ், ஆனால் நாம் 15·4 அவுன்ஸே உட் கொள்கிறோம். அதன் காரணமாக உபரியாக இருக்கும் 2½ லட்சம் டன் உணவு தானியங்கள்தான் கேரளாவிற்கு அனுப்பப்படுகின்றன என்று கனம் அமைச்சர் தமது அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார். இதைப் பல கனம் அங்கத்தினர்கள் மறந்துவிட்டுப் பேசினார்கள். ஒரு கனம் அங்கத்தினர் "ப்ளண்டர்" பல்லவி பாடினார். மற்றொருவர் "பங்க்ளிங்" பல்லவி பாடினார். அவர் இதை ஞாபகத்தில் வைத்துக் கொண்டிருந் திருப்பாரானால், அப்பல்லவி பாடியிருக்க மாட்டார். அவர் பல்லவியுடன் நின்றுவிட்டார். அனுபல்லவியும் சரணமும் பாடவில்லை. அனுபல்லவியும் சரணமும் பாடுவதற்கு அவரிடம் உண்மையில் விஷயம் இல்லை.

முன்பு இந்த மாநிலத்தில் பெரும்பான்மையான மக்கள் கேழ்வரகு சாப்பிடுவது வழக்கம். மக்கள் கேழ்வரகுக் கூழ் சாப்பிட்டு வந்தார்கள். கூழ் உடல் நலத்திற்கும் உகந்தது, சத்தானது. " கூழ் குடித்தவன் குண்டு, சோறு தின்னவன் சொத்தை " என்று சொல்வதுண்டு. இனி மேல் அந்தப் பழமொழியைப் புது மொழியாக " கூழ் குடிப்பது குறைவு, சோறு தின்பது சொகுசு " என்று மாற்ற வேண்டியது தான். அரிசி யில்லாத நிலையில் இத்தகைய உணவுகளை மக்கள் சாப்பிடும்படி செய்வதற் கான பிரசாரத்தை அரசாங்கத்தார் செய்ய வேண்டும் என்று சொல்லிக் கொள்கிறேன். கேழ்வரகு சிறந்த உணவு. இது உடலுக்கு நல்ல வளம் தரும் உணவு. இப்போது கேழ்வரகை " ராகி மால்ட் " என்று விற்கிறார் கள். நான்கு அணாவிற்கு வாங்கிய கேழ்வரகை ராகி மால்ட் என்று நான்கு ரூபாய்க்கு விற்கிறார்கள்.

என்னுடைய மற்றுமொரு சிறிய கருத்தினை அரசாங்கத்திற்குத் தெரி விக்க விரும்புகிறேன். தீயணைக்கும் படையினர், சேனையிலுள்ள போர் வீரர்கள் முதலியவர்கள் தினந்தோறும் இரண்டு மணி நேரமாவது பயிர்த் தொழில் செய்ய வேண்டும். அரசாங்கம் அவர்களைப் பயிர்த் தொழில் செய்யச் செய்தால் அதனால் இன்னும் அதிக உபரி உணவு தானியங்கள் ராஜ்யத்திற்குக் கிடைக்கும். அவர்களைப் பயிர்த் தொழில் செய்யச் செய்து அந்த வருமானத்தை அவர்களுக்கே அளித்து விடச் செய்யலாம். மேலும் கல்லூரிகளிலும், பள்ளிகளிலும் மாணவர்களுக்கு விவசாயத் தொழில்களைக் கற்றுக்கொடுக்கலாம். அவர்களை விவசாயத் தொழிலில் ஈடுபடுத்தலாம். அடிப்படைக் கல்வித் திட்டத்தில் அனேக மாக, நூற்பு மட்டுமே அடிப்படைத் தொழிலாக இருக்கிறது. அத்துடன் விவசாயத்தையும் பெருவாரியாக அடிப்படைத் தொழிலாக ஆக்கினால், அவ்வாறும் உணவு தானிய உற்பத்தியைப் பெருக்கலாம்.

மேலும் இப்போது உணவு உற்பத்தியைப்பற்றிப் பேசப்படும்போது, முக்கியமான ஒரு விஷயம் விடுபட்டிருப்பதாக நான் நினைக்கிறேன். மீன் வளத்தைப்பற்றிக் கொஞ்சம் கூடக் குறிப்பிடப்படவில்லை. மீன் ஒரு சிறந்த உணவு. மீன் நல்ல உணவு. பலம் தரும் உணவு. நமது ராஜ்யத்திலுள்ள 6,000 மைல் நீளக் கடற்கரையில் 12 கோடி ஏக்கர் மீன் பிடித்தலுக்கு ஏற்றது. அவைகளில் 40 லட்சம் ஏக்கர்தான் இப்போது மீன் பிடிப்பிற்குப் பயன்படுத்தப்படுகிறது. அதாவது, 1/30 பகுதி தான் இப்போது பயன்படுத்தப்படுகிறது. 29/30 பகுதி பயன் படுத்தப்படவில்லை. எல்லாப் பகுதிகளிலும் மீன் பிடித்து மீன் சேகரிப்பை அதிகரித்தால் உணவுப் பற்றாக்குறை நம் ராஜ்யத்தில் நிச்சயமாக இருக்காது.

கடைசியாக, உணவு சம்பந்தமான பொறுப்பு, அறிவு, ஆற்றல், அனுபவம் அனைத்தும் கொண்ட அகத்துறை அமைச்சரிடம் இருப்பதால் உணவுப் பஞ்சம் வந்து விடுமோ என்று கொஞ்சமும் அஞ்ச வேண்டாம். " அச்சமில்லை, அச்சமில்லை, அச்சமென்பதில்லையே " என்று சொல்லிக் கொண்டு என் பேச்சை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* SRI M. PATANJALI SASTRY : Sir, I will be very brief in my remarks. Let me start by congratulating the Hon. Minister on the very encouraging and reassuring statement that he has placed before the House. But I have a suspicion about these statements. We had such statements before by both the Central Government and the State Government, and most of them have been belied. Notwithstanding these statements, the food situation has been steadily deteriorating. We have, during the last eleven years after Independence, imported foodgrains of the value of over a thousand crores of rupees, and there is no end to this kind of import. We do not know in the foreseeable future when this kind of import is going to stop. The other day the Central Food Minister laid the responsibility squarely on the States for feeding the population of their respective territories. So, instead of being complacent and supposing that monsoons are favourable and that food crops are coming up all right, let us import a sense of urgency in tackling the food problem and try to solve the food situation ourselves without relying upon the assistance of the Central Government or foreign imports.

While the food supply situation is said to be favourable, prices are admittedly soaring. The Government note explains it by saying that it is due to the scarcity in certain northern States like Uttar Pradesh, Bihar, West Bengal and Orissa. This explanation is hardly convincing. After the institution of the zonal arrangement (each zone being considered to be self-sufficient, and transport being banned from one zone to another), there is no obvious reason why the scarcity in other States or other zones should make any impact upon the grain markets of this zone. It is difficult to understand this reasoning. Therefore, I submit that perhaps the
6-10 p.m. cause is to be sought elsewhere. Are our Government really satisfied that the grain merchants here are not storing grains with a view to exploit the consumer later by increasing the prices? I have a suspicion that they are storing. Why not force the grain merchants to disclose their stocks, put a ceiling on the prices, purchase and distribute them through fair price shops? In fact, that is the suggestion made by the Government of India. This is what is stated in the Note : " The Government of India were not agreeable to release any more foodgrains from their stocks but suggested that the State Government may itself enter the market and procure the requisite foodgrains for distribution through the fair price shops." It is said that if the State Government enter the market, the prices would push up, and that way there would be great difficulty. But, why not impose a ceiling on the prices? If that is done, the difficulty will be overcome to a certain extent. Instead of relying upon the monsoons which may or may not be favourable and on the statistical self-sufficiency contingent upon

favourable monsoons which may not turn out to be favourable after all, I would respectfully submit that the Government should try to fix a ceiling on the prices of foodgrains, force the grain merchants to disclose their stocks, procure the available or the necessary stocks and distribute the same among the poor people at reasonable rates. I think that will be the best short-term solution instead of trying to increase the production through major irrigation schemes and all those things. Now, the prices are soaring. The hon. Member Sri John Asirvatham has given a vivid description of the situation. It shows how within the last few months or within the last one year or so, the prices of foodgrains have tended to soar. If this is to be curbed and if foodgrains are to be made available at reasonable prices to the common people, to the poor classes, there should be a short-term solution rather than solely relying upon increasing food production through major irrigation schemes. Thank you, Sir.

* THE HON. SRI M. BHAKTAVATSALAM : கனம் தலைவர் அவர்களே, இரண்டு நாட்கள் உணவு நிலைமைபற்றி விவாதம் இங்கே நடந்தது. இந்த விவாதத்தை நான் வரவேற்கிறேன். அரசாங்கம் தன் கடமையைச் செய்வதற்கு இது மிகவும் உபயோகமாக இருக்குமென்று நினைக்கிறேன். நானும் விடாமல் உணவு நிலைமை எப்படி இருக்கிறது என்பதைப்பற்றிப் பத்திரிகைகளில் கவனித்துக்கொண்டு வருகிறேன். கவலைப்படவேண்டிய நிலைமையில் நாம் இல்லை என்பது ஒருபுறம் இருக்க கவலைப்படவேண்டியவர்களாகவும் நாம் இருக்கிறோம் என்பது இருக்கக் கூடிய நிலைமையை நன்றாகக் கவனித்துக்கொண்டு வருபவர்களுக்குத் தெரியும். உணவுப் பிரச்னைதான் மிகவும் முக்கியமான பிரச்னை, மக்களுடைய ஜீவாதாரமான பிரச்னை. இந்தப் பிரச்னையைப் பொறுத்த வரையில் நாம் சரியான வழியில் சென்றுகொண்டிருக்கிறோமா, தப்பான வழியில் சென்றுகொண்டிருக்கிறோமா என்பதைப்பற்றி இந்தச் சட்ட மன்றமும் நன்றாக உன்னிப்பாகக் கவனித்துக்கொண்டிருக்க வேண்டும். இந்த வகையில் அரசாங்கத்திற்கும் தக்க யோசனைகளை அவ்வப்போது உறுப்பினர்கள் சொல்லிக்கொண்டும் வரவேண்டும். இந்த முறையில் இந்த விவாதத்தில் கலந்துகொண்ட கனம் அங்கத்தினர்கள் யாவருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எதிர்க் கட்சியிலுள்ள சில அங்கத்தினர்கள் இதைச் சாக்காக வைத்துக் கொண்டு சர்க்காரின் கொள்கையை ரொம்பக் கடுமையாக எதிர்த்தார்கள். அரசாங்கத்தின் போக்கைப்பற்றிக் கடுமையாகத் தாக்கவேண்டுமென்று பேசினார்கள். எதிர்க் கட்சித் தலைவர் அடிக்கடி உலக நாடுகளையெல்லாம் சுற்றிப் பார்த்துக்கொண்டு வருகிறவர் இங்கே வந்து பார்க்கும்போது அவருக்கு ஏமாற்றம், வருத்தம். அதனால் ஒருவிதமான அபிப்பிராயம். ஆகவே அவர்களும் சர்க்காரைத் தாக்கினார்கள். கனம் அங்கத்தினர் ஸ்ரீ ஆதித்யன் அவர்கள் ரொம்பக் கடுமையாகத் தாக்கினார்கள். இந்த அரசாங்கம் தவறே செய்துகொண்டு வருகிறது என்று அவர்கள் சொன்னார்கள். அவர்களும் கொஞ்ச காலம் இந்தக் கட்சியோடு தொடர்பு வைத்துக்கொண்டிருந்தவர்தாம். அதற்க்கப்புறம் தான் பிரிந்தார்கள். இங்கே சேர்ந்திருந்த காரணமாகத்தான் இவ்வளவு விஷயமும் அவர்களுக்குத் தெரிந்த்தோ என்னவோ ? எதிர்க் கட்சியிலிருந்து ஸ்ரீ ரசா கான் அவர்களும் கடுமையாகத் தாக்கிப் பேசினார்கள். அவர்கள் கவலை எல்லாம் " இங்கே பேசி என்ன பிரயோசனம் ? விலை நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டிருக்கிறதே " என்பது தான். இன்று பேசிய கனம் அங்கத்தினர் ஸ்ரீ ஆசீர்வாதம் அவர்கள் விலை ஏறுமுகமாக இருக்கிறது என்பதை எடுத்துக்காட்ட ஒரு பட்டியலைச் சமர்ப்பிப்பதன் மூலம் தன்னுடைய கடுமையான ஆட்சேபத்தை வெளியிட்டுவிட்டார்கள். அவர்கள் கொடுத்த விவரம் எனக்கு மிகவும் உபயோகமாக இருந்தது. அதில் தவறு இல்லை. ஆனால் அரசாங்கம் இந்த உணவுப் பிரச்னையில் திட்டவட்டமாக என்ன

நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும் என்பதற்கு யாரும் எந்த யோசனையையும் வெளியிட்டிருப்பதாக எனக்குத் தெரியவில்லை. கனம் அங்கத்தினர் ஸ்ரீ ஆசீர்வாதம் கொடுத்தது கூட வெறும் புள்ளிவிவரம் தான். அந்தப் பட்டியலில் கிராம்பு விலை, குங்குமப்பூவின் விலை—இதையெல்லாம் கொடுத்தார். என்னிடத்தில் குங்குமப்பூவின் விலை, கிராம்பு விலை ஒன்றும் கிடையாது, அரிசி விலை தெரியும். இன்றைக்குக் காலையில் கூட நிலைமை எப்படி இருக்கிறது, உணவு தானியங்களின் விலை எப்படி இருந்து வந்திருக்கிறது என்பதையெல்லாம் பார்த்துக்கொண்டு தான் வந்தேன். ஆனால் குங்குமப்பூ விலையைப் பார்க்கவில்லை. கிராம்பு விலையைப் பார்க்கவில்லை. கனம் அங்கத்தினர் ஸ்ரீ ஆசீர்வாதம் இவற்றினுடைய விலைகளையெல்லாம் கொடுத்தார். அவர் கொடுத்த புள்ளி விவரங்களின்படி பார்த்தாலே தெரியும். எல்லாவற்றினுடைய விலையும் ஏறிக்கொண்டிருக்கிறது. அரிசி விலை தான் ஏறியிருக்கிறது என்பதில்லை. இதர உணவு தானியங்களின் விலை தான் ஏறியிருக்கிறது என்பதில்லை. எல்லாவற்றினுடைய விலையும் ஏறியிருக்கிறது. யுத்தம் என்று வந்தால் மேலும் இந்த விலைகள் எப்படி உயருமோ என்கிற எண்ணம் எங்களுக்கு இல்லாமல் இல்லை. ஆனால் இந்த விலை எப்போதுமே ஏறிக்கொண்டு தான் இருக்கிறதா ? குறைந்தது இல்லையா ? இப்படி ஏறுவது அபாயத்தின் விளைவா? இதையெல்லாம் நாம் சிந்தித்துப்பார்த்துத்தான் ஆகவேண்டும். இப்போது விலை அதிகமாக இருக்கிறது. உடனடியாக விலை குறைவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்கிறார்கள். உண்மை தான். கடைசியாகப் பேசிய ஸ்ரீ பதஞ்சலி சாஸ்திரிகளும் கூடச் சொன்னார்கள். ''பின்னால் பயன் அளிக்கும் பெரிய திட்டங்களிலேயே கவனம் செலுத்திக்கொண்டிருந்தால் போதாது. இன்றைக்கு விலை ஏறுவதைத் தவிர்க்கவேண்டும்'' என்றார்கள். அதற்கு என்ன செய்வது ? ஒன்று செய்யலாம். கட்டுப்பாட்டை மறுபடியும் கொண்டு வரலாம். கட்டுப்பாட்டைக் கொண்டுவந்து இந்த விலைக்குத்தான் விற்க வேண்டும் என்று செய்யலாம். அது விவசாயிகளையும் பாதிக்கும். அரசாங்கமும் கட்டுப்பாட்டைக்கொண்டு வருவதைத் தவிர வேறு நிலைமை இல்லை என்றாலொழிய, கட்டுப்பாட்டை மீண்டும் கொண்டு வருவது என்றால், மிகவும் யோசித்துத்தான் ஆக வேண்டும். கட்டுப்பாடு கொண்டு வருவது என்றாலும் அதை மக்கள் விரும்புவார்களா என்பது ஓர் பிரச்னை. இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு உணவு தானியங்களின் விலை குறைந்தது என்பது நம் எல்லோருக்கும் தெரியும். அப்போது சட்ட
6-20 p.m. சபையிலுள்ள அங்கத்தினர்கள் உணவு தானியங்களின் விலை இப்படிக் குறைகிறதே, இதனால் விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்களே, இப்படி அதிகமாகக் குறையாமல் இருக்க அரசாங்கத்தார் என்ன செய்யப் போகிறார்கள் என்று கேட்டார்கள். அப்போது '' விலை குறைவது விவசாயிகளைப் பாதிக்கத்தான் செய்யும். ஓரளவுக்கு மேல் விலை குறைந்தால், அரசாங்கமே உணவு தான்யங்களை வாங்கி விவசாயிகள் நஷ்டப்படாமல் பார்த்துக் கொள்ளும் '' என்று உறுதி அளித்தேன். அரசாங்கமும் மிகவும் பொறுப்போடு அப்போதிருந்த நிலைமையைக் கவனித்து வந்தது. உற்பத்தி நன்றாக இருந்தது. கொஞ்சம் ஏற்றுமதி செய்யவும் நம்மால் முடிந்தது. விலை மிகக் குறைந்து விட்டாலும் விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள். இப்போதுள்ள நிலைமையைக் கவனித்துப் புள்ளி விவரம் கொடுத்திருக்கிறோம். பருவ மழை தவறினால் விவசாயம் எப்படிப் பாதிக்கப்படும் என்பதையும் நாங்கள் உணராமல் இல்லை. அதையும் சமாளிக்கக்கூடிய நிலைமையில் நாம் இருக்க வேண்டும். இன்றைக்கு நம்முடைய டார்கெட் 46 லட்சம் டன்னுக்கு மேல் இன்னும் 8 லட்சம் டன் உற்பத்தி செய்தாக வேண்டும் என்பது. இதைப் பெருக்குவதற்குப் புதிதாகத் திட்டங்களைப் போடவேண்டுமென்பதில்லை. விவசாயிகளுடைய பொருளாதார நிலைமை பாதிக்கப்படாமல் இருப்பதற்கும் தக்க நடவடிக்கை எடுத்துக்கொண்டாக வேண்டும். உணவு தானிய விளைச்சலை அதிகரித்துக்கொண்டுதான் இருக்கிறோம். சில ஆண்டுகளின் சராசரி விளைச்சலுடன் ஒப்பிட்டால், இப்போது விளைச்சல் 15 சத விகிதம் அதிகரித்திருக்கிறது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் முடிவதற்குள் இதை 30 சத விகிதமாக அதிகரிப்பதற்கான-அதாவது, இன்னும் 15 சத விகிதம் உற்பத்தி செய்வதற்கான—திட்டங்களைத் தான் நாம் நிறைவேற்றிக்கொண்டிருக்கிறோம். விளைச்சலை இன்னும் அதிகப்

17th September 1958 [Sri M. Bhaktavatsalam]

படுத்த முடியும் என்ற நம்பிக்கையுடன் இருக்கிறோம். கனம் அங்கத்தினர் ஸ்ரீ ஆதித்யன், உணவு தானிய விளைச்சலை அதிகரித்த விவசாயிகளுக்கு நாம் கடமைப்பட்டவர்கள் என்றும், அவர்களை நாம் பாராட்ட வேண்டும் என்றும் சொன்னார். எங்களுக்குப் பாராட்டு வேண்டாம். விவசாய ஆராய்ச்சிகளில் ஈடுபட்டிருக்கும் அதிகாரிகள் தங்கள் அனுபவத்தில் கையாண்ட வெற்றிகரமான முறைகளையும், ஆராய்ச்சியின் மூலம் கண்டறிந்த வெற்றிகரமான முறைகளையும் எல்லா விவசாயிகளுக்கும் தெரிவித்து, அவைகளை எல்லா விவசாயிகளும் கையாளும்படி செய்வதற்கு மிகவும் பாடுபடுகிறார்கள். அவர்களை நான் அரசாங்கத்தின் சார்பில் பாராட்டுகிறேன். அவர்களைக் கனம் அங்கத்தினர்களும் பாராட்டுவார்கள் என்பதில் சந்தேகமில்லை. ஆனால், நாம் முக்கியமாக, விவசாயிகளைப் பாராட்ட வேண்டும். நம் நாட்டில், உழவுத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள் பெருங்குடி மக்கள். அவர்களில் பெரும்பான்மையோர் சிறு விவசாயிகளாக இருந்தாலும், அவர்கள் எல்லோரும் பெருங்குடி மக்கள். அவர்கள் புதிய விவசாய முறைகளை ஏற்றுக்கொண்டு, மிகுந்த உற்சாகத்துடனும் ஆர்வத்துடனும் விவசாயப் பணிகளில் ஈடுபட்டார்கள். அவர்கள் அவ்வாறு செய்து விளைச்சலை அதிகரித்திருக்கிறார்கள். அவர்களை நான் பாராட்டுகிறேன்.

ஆனால், போதிய அளவு விளைந்தாலும், விளையும் தானியங்களை வினியோகிப்பதில்தான் குறைபாடு இருக்கிறது என்று குறிப்பிடப்பட்டது. ஜோனல் ஏற்பாட்டைப்பற்றி டாக்டர் ஜான் குறிப்பிட்டார். இந்த சர்க்காருக்கு உணவு விஷயத்தில் என்ன கொள்கை இருக்கிறது என்று அவர் கேட்டார். ஆனால், அவரே சர்க்காரின் உணவுக் கொள்கையைக் கண்டிப்பதாக ஒரு திருத்தப் பிரேரணையும் பிரேரேபித்திருக்கிறார். ஆகவே, இந்த சர்க்காருக்கு உணவு விஷயத்தில் ஒரு கொள்கை இருக்கிறது என்றுதான் அவர் உண்மையில் கருதுகிறார். அந்தத் திருத்தப் பிரேரணையைப் பிரேரேபித்திருக்கும் அவர், இந்த சர்க்காருக்கு உணவு சம்பந்தமாகக் கொள்கை இல்லை என்று கூறியிருக்கிறார். அப்படியிருக்கும்போது அவர் எந்தக் கொள்கையைக் கண்டிக்கிறார் என்று எனக்குத் தெரியவில்லை. உணவிற்குக் கண்ட்ரோல் முறையைக் கொண்டுவராமல் இருக்கப் பார்ப்பதும், உணவு தானிய உற்பத்தியில் கவனம் செலுத்தி விளைச்சலைப் பெருக்குவதும், விளைச்சலைப் பெருக்குவதற்காக நீர்ப்பாசனத் திட்டங்களையும் இதரத் திட்டங்களையும் நிறைவேற்றுவதும், விவசாயிகளுக்கு வசதிகள் அளிப்பதும் சர்க்காரின் உணவுக் கொள்கை. மூன்றாவது உணவு 'ஜோன்' ஏற்பாடு. உணவு ஜோன் ஏற்பாட்டைப்பற்றிப் பல அபிப்பிராயங்கள் கூறப்பட்டன. (ஸ்ரீ K. V. ராமஸ்வாமி: ஜோன் என்றால் என்ன? ஜோன் என்றால் மண்டலம் என்று கொள்ளலாம். 'திராவிடஸ்தான்' என்று சிலர் சொல்கிறார்கள் அல்லவா? இப்போது தென் உணவு மண்டலத்தில் இருக்கும் ராஜ்யங்கள், அவர்கள் திராவிடஸ்தானில் இருப்பதாகக் கூறும் ராஜ்யங்கள் என்று நினைக்கிறேன். திராவிடஸ்தானைப்பற்றி எனக்கு அவ்வளவாக சாஸ்திரம் தெரியாது. தென் உணவு மண்டலம் எனப்படுவது, சென்னை, மைசூர், ஆந்திரா, கேரளா ஆகிய நான்கு ராஜ்யங்களும் கொண்ட பகுதி. இந்தப் பகுதியிலுள்ள ராஜ்யங்களின் உணவு தானியங்கள் நடமாட்டம் இந்தப் பகுதிக்குள்ளேயே இருக்க வேண்டும். இந்தப்பகுதியைச் சேர்ந்த உணவு தானியம் இந்தப் பகுதிக்கு வெளியேபோக வேண்டுமானால், அதற்கு மத்திய சர்க்காரின் அனுமதி வேண்டும்.

உணவு மண்டலம் சம்பந்தப்பட்ட வரையில், அரசாங்கம் ஒரு யோசனையைக் கவனிக்கும் என்று குறிப்பிட்டேன். சென்னை ராஜ்யத்தை எந்த ராஜ்யத்துடனும் சேர்க்க வேண்டாம் என்றும், இதைத் தனி உணவு மண்டலமாக ஆக்க வேண்டுமென்றும் மத்திய சர்க்காரிடம் நாங்கள் சொன்னோம். அதற்கு மத்திய சர்க்கார் ஒப்புக்கொள்ளவில்லை. சென்னையைத் தனி உணவு மண்டலமாக ஆக்க வேண்டுமென்று நாங்கள் கோரியபோது, சென்னையில் உணவுப் பற்றாக்குறை இருந்தது. அந்தப் பற்றாக்குறை எங்களுக்குக் கவலையளித்தது. அந்த நிலைமையில் "இந்த ராஜ்யத்தில் பற்றாக்குறை இருக்கும்போது கேரளாவிற்கோ மற்ற ராஜ்யங்

[Sri M. Bhaktavatsalam] [17th September 1958

களுக்கோ இங்கிருந்து உணவு தானியங்கள் அனுப்பப்பட்டால், இங்கேயுள்ள பற்றுக்குறை அதிகமாகும்; ஆகவே இந்த ராஜ்யத்தைத் தனி மண்டலமாக ஆக்குங்கள்" என்று மத்திய சர்க்காரிடம் சொன்னோம். அதற்கு, மத்திய சர்க்கார் "உங்களுக்கு எவ்வளவு பற்றுக்குறை இருக்கிறதோ, அதைப் போக்குவதற்கு நீங்கள் உணவு தானியங்கள் கோருங்கள். நாங்கள் கொடுப்போம். உங்கள் ராஜ்யத்தைத் தென் மண்டலத்தில் சேர்க்கிறோம்" என்று சொல்லி, எங்கள் கோரிக்கையை நிறைவேற்றவில்லை.

ஆனால் இன்று, உணவு தானியங்களைப் பொறுத்த வரையில், சென்னை ராஜ்யத்தில் பற்றுக்குறை இல்லை. உணவு நிலைமைபற்றி எவ்வளவோ குறை சொல்ல முடியும். ஒரு சிலர் பட்டினியாக இருப்பதாகச் சொல்ல முடியும். ஒரு சிலர் சாப்பாடு கிடைக்காமல் தவிப்பதாகச் சொல்ல முடியும். அந்த நிலைமை எங்கேயும்தான் இருக்கிறது. உதாரணமாக, 5—6 லட்சம் டன்கள் உபரியாக உணவு தானியங்களை உற்பத்தி செய்துவிட்டு, அதை மற்றவர்களுக்குக்கூடக் கொடுக்காமலிருக்கும் ஆந்திர ராஜ்யத்தில் வறுமையுற்றிருப்பவர்களும், பிச்சை எடுப்பவர்களும் இல்லையா? வறுமை ஒரு விஷயம், உணவுப் பஞ்சம் வேறு விஷயம். இன்று நமது ராஜ்யத்தில் உணவுப் பஞ்சம் இருக்கிறதா என்றால், இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். நம் ராஜ்யத்தில் இப்போது உணவுப் பஞ்சத்தை நீக்கிவிட்டோம். இந்த அரசாங்கத்தைப் பலமாகத் தாக்க விரும்புபவர்களும் இதை மறுக்க முடியாது.

எதற்கெடுத்தாலும் சர்க்கார் புள்ளி விவரங்கள் கொடுக்கிறார்கள் என்றும், அவைகளை எப்படி நம்புவது என்றும் குறிப்பிடப்பட்டது. நான் கூட புள்ளி விவரங்களைக் கவனிக்க வேண்டாம் என்று தாழ்மையுடன் சொல்லிக்கொள்வேன். 'The proof of the pudding is in the eating of it' என்று ஒரு ஆங்கிலப் பழமொழி உண்டு. கனம் அங்கத்தினர்கள் உணவு நிலைமையை அந்த முறையில் கவனிக்கலாம். இப்போது நாம் மத்திய அரசாங்கத்திடமிருந்து ஒரு மணி அரிசி கூட வாங்கவில்லை. மத்திய அரசாங்கத்திடமிருந்து நமக்குக் கோதுமை வருகிறது என்பது வாஸ்தவம்தான். மற்றப்படி அரிசிக்கு அவர்களிடம் கையேந்தி நிற்கும் நிலைமையில் இன்று நாம் இல்லை. அவர்களும் கொடுப்பதில்லை, நாமும் கேட்பதில்லை. இப்போது ஆந்திராவிலிருந்து சென்னைக்கு அரிசி வருவது குறைந்துவிட்டது. கேரளாவிற்கு நம் ராஜ்யத்திலிருந்து $2\frac{1}{2}$ லட்சம் டன் உணவு தானியம் ரெயிலில் போயிருக்கிறது என்று சொன்னேன். ஒரு கனம் அங்கத்தினர் குறிப்பிட்டதுபோல, கேரளாவிற்கு உணவு தானியங்கள் இங்கிருந்து லாரியிலும் போயிருக்கக் கூடும். இருந்தாலும், அரிசி இல்லை என்ற புகார் இந்த ராஜ்யத்தில் இப்போதில்லை; அரிசி கிடைக்கவில்லையே யென்ற புகார் இப்போது இந்த ராஜ்யத்தில் எங்கேயும் இல்லை. இதிலிருந்து, இங்கே உற்பத்தி பெருகியிருக்கிறது என்பதும், நம் தேவைக்குப் போதிய அளவு உணவு தானியங்கள் இங்கே இருக்கின்றன என்பதும் தெளிவாகப் புலனாகிறது என்பதைக் கனம் அங்கத்தினர்கள் கவனிக்க முடியும்.

சென்னையை ஏன் தனி உணவு மண்டலமாக ஆக்கக் கூடாது என்று சில கனம் அங்கத்தினர்கள் கேட்டார்கள். இப்போதுள்ள தென் உணவு மண்டலத்தில் இதர ராஜ்யங்களுடன் நம் ராஜ்யம் இருப்பதிலுள்ள சாதக பாதகங்களை ஆராய்வோம். விவசாயத்தைப்பற்றிப் பேசும்போது, விளைபொருள்களின் விலைகளைப்பற்றியும் பேசுகிறோம். உணவுப் பிரச்னையைச் சமாளிப்பதற்கு சர்க்காருக்கு முதுகெலும்பாக இருப்பவன் விவசாயி. அந்த விவசாயி உற்பத்தி செய்யும் பொருள்கள் சரிவர விற்பனையாக வேண்டும். அவைகளுக்குப் போதிய விலை கிடைக்க வேண்டும். விளை பொருள்களின் விற்பனைக்கு நல்ல வாய்ப்பு இல்லாவிட்டால், விவசாயம் செழித்தோங்க முடியாது. விற்பனைக்குக் கூட்டுறவு முறையிலும், மற்ற முறைகளிலும் வழி காண வேண்டும். சென்னையை மாத்திரம் ஒரு உணவு மண்டலமாக வைத்து சென்னையின் உணவு தானியங்கள் வெளியே விற்பனையாகாதபடி சென்னைக்கு ஒரு வேலி போட்டுவிட்டால், சென்னையிலுள்ளவர்கள் அவைகளை இந்த ராஜ்யத்தில் தவிர வேறு எங்கே விற்க முடியும்? மேலும்,

17th September 1958] [Sri M. Bhaktavatsalam]

அவ்வாறு செய்துவிட்டால், சென்னைக்கு உணவு தானியங்கள் வெளியிலிருந்து தேவைப்படும் காலத்தில், அவைகளை நாம் வெளியிலிருந்து பெற முடியாது ; மத்திய அரசாங்கத்தின் அனுமதி பெற்றுத்தான் அவைகளை நாம் வெளியிலிருந்து பெற முடியும். இப்போது தென் உணவு மண்டலத்திலுள்ள நான்கு ராஜ்யங்களிலும் இந்த நான்கு ராஜ்யங்களின் உணவு தானியங்களின் புழக்கமும் இருக்க முடியும். இப்போதுள்ள தென் உணவு மண்டலத்தில் சென்னை ராஜ்யம் இருப்பதால், நமக்கு மற்றுமொரு அனுகூலம் இருக்கிறது. நம் ராஜ்யத்தில் தஞ்சாவூர் போன்ற இடங்களில் குறுகிய காலத்தில் சாகுபடி செய்யப்படும் குறுவை அரிசியை நம் ராஜ்யத்தில் யாரும் சாப்பிடுவதில்லை. தஞ்சாவூர்க் குறுவைப் பயிரைப்பற்றிக் கனம் எதிர்க் கட்சி உபதலைவருக்கு நன்ருகத் தெரியும். இப்போது கேரள ராஜ்ய மக்கள் நம் ராஜ்யக் குறுவை அரிசியை அதிகம் சாப்பிடுகிருர்கள். சென்னை ராஜ்யம் மாத்திரம் ஒரு தனி உணவு மண்டலமாக இருந்தால், நமது குறுவை அரிசியை விறபது கஷ்டமாகிவிடும். நமது ராஜ்யத்தைத் தனி உணவு மண்டலமாக ஆக்க வேண்டும் என்ற யோசனை எங்களுக்கு இருந்தபோது, தஞ்சாவூர் விவசாயிகள் எங்களிடம் வந்து, “ நாங்கள் உறபத்தி செய்யும் குறுவை நெல்லை இங்கே வேறு யாரும் வாங்க மாட்டார்களே. கேரளாவில்தான் அதை வாங்குகிருர்கள். அந்த ராஜ்யம் தனி உணவு மண்டலமாக ஆகிவிட்டால், எங்கள் குறுவை நெல்லை எங்கே விற்போம் ? அப்போது நாங்கள் எங்கள் ‘ க்ராப் பாட்டர்ன் ’-ஐயே மாற்ற வேண்டியிருக்கும் ” என்று சொன்ஞர்கள். தீர ஆலோசித்த பிறகே, இந்த யோசனையை நிறைவேற்றுவோம் எனறு அவர்களிடம் சொல்லியனுப்பினேம். ஆகவே, இப்போதுள்ள தென் உணவு மண்டலத்தில் நம் ராஜ்யம் இருப்பதால், நமக்குப் பெரிய அனுகூலம் இருக்கிறது. ஆந்திராவில் இப்போது அரிசி உபரியாக இருக்கிறது. ஆனல், அந்த அரிசி இந்த மண்டலத்திற்கு அப்பாலுள்ள பீஹார், உத்தரப் பிரதேசம் முதலிய ராஜ்யங்களுக்குப் போவது தடுக்கப்பட்டிருக்கிறது. இதன் காரணமாக, நம் ராஜ்யத்தில் அரிசியின் விலை அதிகம் ஏறவில்லை. ஆந்திராவிலிருந்து அந்த ராஜ்யங்களுக்கு அரிசி போயிருந்தால், நம் ராஜ்யத்தில் அரிசியின் விலை இன்னும் ஏறியிருக்கும். ஆனல், மத்திய அரசாங்கத்தார் ஆந்திராவில் எவ்வளவு அரிசி உபரியாக இருக்கும் என்று நன்ருகக் கணக்குப் போட்டு, அந்த அரிசியை வாங்கித் தென் உணவு மண்டலத்திற்கு வெளியேயுள்ள ராஜ்யங்களுக்குக் கொடுக்கிருர்கள். ஆகவே, தென் மண்டல ஏற்பாட்டில் நமக்குப் பெருத்த அனுகூலம் இருக்கிறது. தென் மண்டல ஏற்பாடு நமக்குப் போதிய பலன் அளிக்காவிட்டாலும், இதனல் பாதகம் இல்லை என்றும் அனுகூலமே என்றும் சொல்ல விரும்புகிறேன். 6-30 p.m.

கனம் அங்கத்தினர் ஸ்ரீ ஆதித்யன் ஒன்று சொன்ஞர். வேறு சில கனம் அங்கத்தினர்களும் அதைக் குறிப்பிட்டார்கள். அவர்கள் கூறிய விஷயம் என்னைத் தூக்கிவாரிப் போட்டது.

SRI MOHAMED RAZA KHAN : I felt that there was a demand for Nellore rice in Madras. May I know from the Hon. Minister whether attempts are being made to prevent Andhra rice from coming to Madras either at the Governmental level or at the business level?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I do not think that there is any attempt to prevent Andhra rice from coming to Madras. It is a question of prices. They expect higher prices than what we would pay. So, the stocks are held up. That is the position.

அன்று பேசிய கனம் அங்கத்தினர் ஸ்ரீ ஆதித்யன் அவர்கள் ‘ புதிதாக டெனண்ட் என்று ஒரு கிளாஸ் எதற்காக அமைத்திருக்கிருர்கள் ? ’ என்று சொன்ஞர்கள். இன்றுகூட எதிர்க் கட்சி உப-தலைவர் அவர்களே குத்தகைதார் எதற்கு என்று கேட்டார்கள். குத்தகைதாரர் என்று எப்படி

[Sri M. Bhaktavatsalam] [17th September 1958

ஏற்படுகிறது ? நிலம் உடையவர்கள் தங்கள் நிலத்தில் தாங்களே சாகுபடி செய்ய முடியாத நிலைமையில் இருக்கும்போது, அல்லது தங்களிடம் இருக்கும் அதிகமான நிலங்களில் எல்லாவற்றையும் தாங்களே சாகுபடி செய்ய முடியாது என்கிற நிலை ஏற்படும்போது குத்தகைக்கு விடுகிறார்கள். குத்தகைக்கு யாரும் விடுவது இல்லை என்கிற நிலைமை இருந்தால், குத்தகைக்காரர்களைப்பற்றிக் கவனிக்க வேண்டாம். குத்தகைக்கு விடுவது என்கிற நிலைமை இருக்கும்போது குத்தகையைக் கட்டுப்படுத்தி, குத்தகைக் காரர்களுக்குப் பாதுகாப்பு அளிக்காமல் இருக்க முடியாது. இப்போது தான் இந்தமாதிரியான கொள்கை அமுலுக்கு வருகிறது என்பதில்லை. சென்னையில் இருக்கக்கூடிய அங்கத்தினர்களுக்குத் தெரியும். ஒரு வீட்டுக் குச் சொந்தக்காரனாக யார் வேண்டுமானாலும் இருக்கலாம். அதில் குடி யிருப்பவனுக்கு ஒரு பாதுகாப்பு வேண்டும், வீட்டின் வாடகையை வீட்டுக் காரன் நினைத்தபடி உயர்த்தக் கூடாது, நினைத்தபடி குடியிருப்பவர்களை மாற்றக் கூடாது என்பதற்காக வாடகைக் கட்டுப்பாட்டு மசோதா கொண்டு வந்திருக்கிறோம். அதைவிட முக்கியமானது நிலம். இங்கே குத்தகைக் காரன் உழைத்துப் பாடுபடுகிறான். அவனுக்கு விவசாயத்தில் உற்சாகம் இருக்க வேண்டுமென்றால், அவனுக்குப் பாதுகாப்பு இருக்க வேண்டும். அவர்களை நாம் மதிக்காமல் விட்டுவிட்டால் விவசாயம்தான் பாதிக்கப்படும். புதிதாகக் குத்தகைக்காரர்கள் முளைக்கவில்லை. ஏற்கனவே இருக்கிறார்கள். அவர்கள் உழைத்துப் பயிரிடுகிறார்கள். அவர்களுடைய நிலைமையை நாம் அனுதாபத்தோடு கவனிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். வீடு என்றால் ஒரு மனிதன் அதைக் கட்டுகிறான். நிலத்தை அப்படி யாரும் கட்டுவதில்லை. இயற்கை அன்னை தந்த செல்வம் அது. நிலம், நீர், காற்று இவை ஒன்றையும் யாரும் படைக்கவில்லை. எல்லோருக்கும் பொதுவாக இறைவ னால் சிருஷ்டிக்கப்பட்டவை அவை. ஆகவே அவை எல்லோருடைய தேவைகளையும் பூர்த்தி செய்யக் கூடியதாக இருக்க வேண்டும். நிலத்தின் விளைவு எல்லோருக்கும் கிடைக்க வழி செய்ய வேண்டும். அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எல்லாம் எடுத்துக்கொண்டாக வேண்டும்.

ஆனால் மற்றொன்று சொன்னார்கள். சிறிய சிறிய நிலமாகத் துண்டாடி விட்டால், எப்படி விவசாயத்தைப் பெருக்க முடியும் என்பதாகச் சொன் னார்கள். நம் நாட்டில் நூற்றுக்கு 90 பங்கு சிறிய விவசாயிகள்தாம். அவர்கள் மட்டும் விவசாயம் செய்கிறார்கள், அக்கறையோடு விவசாயத்தில் போதிய கவனம் செலுத்துகிறார்கள் என்று எப்படிச் சொல்வது ? பெரிய விவசாயிகள் தாம் அக்கறை காட்டுவார்கள், சிறிய விவசாயிகள் காட்ட மாட்டார்கள் என்பது தப்பான அபிப்பிராயம். கிராமப் பக்கம் சென்றால் தெரியும். 'சிறிய சிறிய நிலமாக இருந்தாலும் போதும், கொடுங்கள், நாங்கள் பயிரிடுகிறோம்' என்று சொல்கிறார்கள். நிறைய நிலம் இருப்பவனைவிடக் குறைவாக நிலம் உள்ளவன்தான் விவசாயத்தில் அதிக அக்கறை காட்டுவான் என்பதை நான் சொன்னால், வெறும் வாதத்திற்காக எதிர்க்கலாம். கொஞ்சம் நிலம் உடையவர்களுக்குத் தான் நிலத்தின் அருமை தெரியும்.

இங்கே கம்பனைப்பற்றிச் சொல்லப்பட்டது. காலையில் கூடக் கம்பனா, காப்பியனா என்கிற விவாதம் கேள்வி நேரத்தில் நடந்தது. கம்பன் காவியச் சுவையை நன்றாக அனுபவிக்கின்ற புலவர்கள் பலர் இங்கே இருக்கிறார்கள். கம்பருக்குத் தம்மை வைத்துக் காப்பாற்றிய சடையப்ப வள்ளலிடம் மிகவும் அதிகமான மதிப்பு. ராம பட்டாபிஷேகத்தைப் பற்றிச் சொல்ல வரும்போதுகூட, சடையப்பன் மரபில் வந்தவர்கள் மகுடத்தை எடுத்துக் கொடுக்க வசிஷ்டன் புனைந்தான் மௌலி என்று சடையப்பரை எல்லோரும் நினைக்கும்படியாக அந்த இடத்தில் அவர் பெயரை வைத்திருக்கிறார். இப்படி அங்கங்கே முக்கியமான பத்து இடங் களில் சடையப்பரைப்பற்றிச் சொல்கிற கம்பர் தசரதன் நாட்டு மக்களை யெல்லாம் நன்றாகப் பேணி வளர்த்தான் என்பதற்கு ஒரு உதாரணம் சொல்கிறார். சடையப்பரை அங்கே குறிப்பிடவில்லை. சடையப்பர் அதிக மாக நிலம் உடைய ஒரு பெரும் வள்ளல், பெரிய நிலச்சுவாந்தார். சடையப்ப வள்ளல் எப்படி நிலத்தைப் பேணி வளர்த்தாரோ, அப்படி தசரதன் நாட்டு மக்களைப் பேணி வளர்த்தான் என்று கம்பர் சொல்லி

17th September 1958] [Sri M. Bhaktavatsalam]

யிருக்கலாம். ஆனுல் நாட்டு நிலைமையை நன்ருக உணர்ந்த கம்பர் என்ன சொன்னுர்? ஒரே ஒரு வயலை உடைய விவசாயி அந்த வயலை எப்படிக் கண்ணும் கருத்துமாகப் பேணிக் காப்பாற்றுவானே, அப்படி நாட்டு மக்களைப் பேணி வளர்த்தார் தசரதர் என்கிருர். ஆகவே நிலம் 6-40 p.m. குறையக் குறைய சாகுபடியில் உற்சாகம் குறையும் என்கிற ஐயம் வேண்டாம். அப்போதுதான் இன்னும் கண்காணிப்புடன் விவசாயிகள் நடந்துகொள்வார்கள். அந்தக் காலத்தில் மாடு வைத்துப் போரடிக்க வில்லை, யானை கட்டிப் போரடித்தார்கள் என்று பாட்டுப் பாடி மகிழலாம். ஆனுல் அன்றைக்கு இருந்த நிலைமை வேறு. நல்ல செழுமையான நிலம். இத்தனை ஜனத்தொகை கிடையாது. இப்போது ஜனத்தொகை அதிக மாகியிருக்கிறது. அப்போதிருந்த நிலம்தான் இப்போது. நிலம் அதிகப் படவில்லை. இப்போதுள்ள ஜனத்தொகைக்கு ஏற்ப நம் ராஜ்யத்தின் தேவை உணவு சம்பந்தப்பட்ட மட்டில் எவ்வளவு என்று கணக்குப் போட்டிருக்கிறேம், போடாமல் இல்லை. உணவு தானியம் பயிரிடப்பட வேண்டிய இடங்களில் 'கமர்ஷியல் க்ராப்' பயிரிடுகிருர்கள் என்று குற்றம் சாட்டினுர்கள். அதைத் தடுக்க வேண்டும் என்கிருர்கள். விவசாயிகளுடைய நிலைமை—பொருளாதாரத்தில்—எப்படி இருக்கிறது என்பது நமக்குத் தெரியும். காலணு லாபம் எதில் அதிகம் வருகிறது என்று பார்த்துப் பயிரிட்டு வாழவேண்டிய நிலைமையில் விவசாயி இருக்கிருன். நஷ்டம் வந்தாலும் நீ இதைத்தான் பயிரிட வேண்டும் என்று அவனைக் கட்டாயப்படுத்தக்கூடிய நிலைமையில் நாம் இல்லை. அவனை நாம் கட்டுப் படுத்த முடியாது. அதோடு இன்றைய தினம் 'கமர்ஷியல் க்ராப்' பயிரிடக்கூடியநிலத்தின் விஸ்திரணம் மிகவும் குறைவு. பதின்மூன்று லட்சம் ஏக்கரா என்ருல் இருபதாயிரம், முப்பதாயிரம் ஏக்கராவில் வேண்டு மாஞல் 'கமர்ஷியல் க்ராப்' பயிரிடலாம். இதுவும் வேண்டாம் என்று சொல்லிவிட முடியாது. நமக்கு அதுவும் வேண்டியிருக்கிறது. நமது ஆடைத் தேவையைப் பூர்த்தி செய்துகொள்ள நமக்குப் பருத்தி வேண்டும். பருத்தி விளைச்சல் இந்த ராஜ்யத்தில் 2½ லட்சம் டன்னிலிருந்து 3½ லட்சம் டன்னுகப் பெருகியிருக்கிறது. பருத்தியை அவ்வளவு பயிரிடுவதால் உணவு உற்பத்திக்கு ஒரு பாதகமும் ஏற்படாது என்றுதான் கூற விரும்புகிறேன்.

நீர்ப்பாசனத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வந்தாலும், அவை நன்ருக பயன்படுத்தப்படவில்லை என்று சில கனம் அங்கத்தினர்கள் சொன்னுர்கள். பத்திரிகைகளில் சில ராஜ்யங்கள் சம்பந்தமாக இவ்வாறு கூறப்பட்டால், இந்த ராஜ்யத்தைப்பற்றியும் இந்த சபையில் இவ்வாறு சொல்வது சரி யல்ல. பத்திரிகைகள் வேறு சில ராஜ்யங்களைப்பற்றி இவ்வாறு எழுது கின்றன. நீர்ப்பாசனத் திட்டங்களைப் பொறுத்த வரையில், நம் ராஜ் யத்தைப் பத்திரிகைகள் பாராட்டுகின்றன. நீர்ப்பாசனத் திட்டங்களின் உப யோகத்தை இந்த ராஜ்ய விவசாயிகள் எல்லோரும் நன்ருகத் தெரிந்து கொண்டிருக்கிருர்கள். பாசன வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ள இடங் களில் தண்ணீர் முழுவதையும் விவசாயிகள் விவசாயத்திற்கு நன்ருகப் பயன்படுத்துகிருர்கள். அதிகப்பட்ச சாத்தியமான நிலங்களுக்கு பாசனத் திட்டங்களின் தண்ணீர் உபயோகிக்கப்படுகிறது. மேலும் சிறு பாசனத் திட்டங்களை நிறைவேற்றுவதில் இப்போது கவனம் செலுத்தப்பட்டு வரு கிறது. ஒவ்வொரு பாசனத் திட்டமும் பூர்த்தியானவுடன் அத்திட்டத்திஞல் கிடைக்கும் தண்ணீர் முழுவதும், ஒரு சொட்டுத் தண்ணீர்கூட வீணுக்கப் படாமல், விவசாயத்திற்குப் பயன்படுத்தப்படுகிறது. இதற்கு, விவசாயிகளை நாம் பாராட்ட வேண்டும்.

ரசாயன உரங்களை எடுத்துக்கொண்டால், அவை நம் ராஜ்யத்தில் பற்ருக் குறையாகத்தான் இருக்கின்றன. சிந்திரியில் உற்பத்தி செய்யப்படும் உரம் போதவில்லை. மத்திய அரசாங்கத்தார் ரசாயன உரங்களை இறக்குமதி செய்கிருர்கள். ஆனுல் அன்னியச் செலாவணி நெருக்கடியானது போதிய அளவு ரசாயன உரம் இறக்குமதி செய்யப்படுவதற்குக் குறுக்கே நிற்கிறது. இருந்தாலும், மத்திய சர்க்கார் ரசாயன உரங்களை வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்து குறைந்த விலைக்கு எல்லா ராஜ்யங்களுக்கும் கொடுக் கிருர்கள். அவர்கள் இன்னும் அதிகமாக ரசாயன உரங்களைக் கொடுத் தால்தான், கணிசமான அளவிற்கு உணவு உற்பத்தியைப் பெருக்க முடியும். இன்னும், பற்ருக்குறையைச் சமாளிப்பதற்காக 'கம்போஸ்ட்'

[Sri M. Bhaktavatsalam] [17th September 1958]

உரம் பசுந்தாள் உரம் ஆகிய உரங்களை ஏராளமாக உற்பத்தி செய்து விவசாயிகளுக்குக் கொடுப்பதில் கவனம் செலுத்தப்படுகிறது. விவசாயிகளும் இந்த உரங்களை நன்றாகப் பயன்படுத்தி வருகிறார்கள் என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

ஆகவே, உணவு நிலைமை சம்பந்தமாக நாங்கள் சுய திருப்தியோடு—அலட்சியமாக—இல்லாமல், உணவு தானியங்களின் உற்பத்தியைக் கணிசமான அளவிற்கு, அதாவது எட்டு லட்சம் டன் உபரி வரக்கூடிய அளவிற்கு, பெருக்க வேண்டுமென்ற நோக்கத்துடன், அதற்கான திட்டங்களை உருவாக்கி நிறைவேற்றி வருகிறோம். உணவு தானியங்களின் விலைகள் ஏறியிருக்கின்றன என்றால், அது கவலையைத் தருகிறது. உணவு தானியங்களின் விலைகள் உயர்ந்தால், அவைகளைக் குறைப்பதற்காக நடவடிக்கையும் எடுப்போம். அதே சமயத்தில் அவைகளை உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்குப் பாதகம் ஏற்படாத முறையில் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அப்படிப்பட்ட நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்துக்கொண்டு தான் வருகிறது. உணவு சம்பந்தமான திட்டங்களை நிறைவேற்றுவதில் எல்லோருடைய ஒத்துழைப்பையும் நாங்கள் கோருகிறோம். கனம் அங்கத்தினர்கள் உணவு நிலைமையை நன்றாக ஆராய்ந்து உணவுப் பிரச்னையைச் சமாளிப்பதற்கு உருப்படியான யோசனைகளைச் சொன்னால், அவைகளைப் பரிசீலித்து ஏற்றுக்கொள்ள அரசாங்கம் தயாராயிருக்கிறது. அத்தகைய ஒத்துழைப்பு இந்த மன்றத்தில் அரசாங்கத்திற்குக் கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் என் வார்த்தையை முடித்துக்கொள்கிறேன்.

MR. CHAIRMAN : I shall put the amendment of the hon. Member Sri Mohamed Raza Khan to vote.

SRI MOHAMED RAZA KHAN : The Hon. Minister may request me to withdraw the amendment, Sir.

* THE HON. SRI M. BHAKTAVATSALAM : I shall be most happy, Sir, to request the hon. Member and the other hon. Member Dr. John not to press the amendments in the light of what I have stated.

SRI MOHAMED RAZA KHAN : I followed the gist of the speech of the Hon. Minister. I take it that it is a very forceful speech. He dealt with all the aspects of the matter. In view of that, I beg leave to withdraw the amendment moved by me.

The amendment of Sri Mohamed Raza Khan was, by leave, withdrawn.

MR. CHAIRMAN : Dr. V. K. John, are you withdrawing your amendment?

DR. V. K. JOHN : I press my amendment, Sir.

MR. CHAIRMAN : I shall put the amendment of Dr. V. K. John to vote. The question is—

'Add the following at the end of the motion—

"and on such consideration, this House condemns the policy of the Government which is leading the State and the country to an economic crisis resulting in the rise in the cost of agricultural products and the cost of living." '

The amendment was put and lost.

17th September 1958]

MR. CHAIRMAN : I shall now put the amendment of the Hon. Sri M. Bhaktavatsalam to vote. The question is—

'Add the following at the end of the motion—

"and on such consideration, this House approves the policy of the Government." '

The amendment was put and carried.

MR. CHAIRMAN : I shall now put the motion, as amended, to vote. The question is—

'That the Statement in regard to the general food situation in Madras State be taken into consideration and on such consideration, this House approves the policy of the Government.'

The motion, as amended, was put and carried.

MR. CHAIRMAN : The House will now adjourn and meet again at 3 p.m. to-morrow.


The House then adjourned.

## V.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

* **145.** *Notification issued with G.O. Ms. No.* 2266, *Home, dated 9th August* 1958, *regarding amendment to rule* 290 *of the Madras Motor Vehicles Rules,* 1940.

* 146. *Notification issued with G.O. Ms. No.* 2261, *Revenue, dated 23rd June* 1958, *regarding determination of basic annual sum in respect of Avanam Estates I to VI in Pattukottai taluk—Order under section* 68 *of the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act,* 1948 (*Madras Act XXVI of* 1948).






* Laid on the table of the House on 13th September 1958.

[17th September 1958

**APPENDIX :**

[Vide answer to starred question No. 20-A asked by Sri K. Balasubramanya Ayyar at the meeting of the Legislative Council held on 17th September 1958, page 285 supra.]

On the 30th of July 1958, some of the workers of the "Hindu" struck work. The strike was called off on the 10th of August 1958. During the period between the 31st of July and the 5th of August there was picketing of the office of "The Hindu" by the workers on strike. The following statement gives an account of the steps taken by the Government to maintain law and order during the strike period :—

On the 29th July 1958, the management of "The Hindu" dismissed a Lino-operator named Balasundaram, who is also the Vice-President of "The Hindu" Office and National Press Employees' Union. According to the Management, the dismissal was a punishment for his refusal to obey orders relating to change of shift. A section of the workers of "The Hindu", numbering about 460, struck work at 9 p.m. on the 30th July, as a protest against this dismissal, which, they alleged, was a case of victimisation for trade union activities.

On the night of 30th July 1958, the strikers assembled in groups in front of "The Hindu" office with the object of preventing the loyal workers from going in for work. Information about this was given to the police at about 9-30 p.m. and a police party was rushed to the spot. At about 11-15 p.m., the strikers obstructed a van belonging to "The Hindu" office bringing in loyal workers, beat the driver, pelted stones at, and caused some damages to, the vehicles. They also threw brickbats and stones on the police party on duty, causing injuries to them. As the strikers behaved in an unruly manner, a lathi charge was ordered and eight persons were rounded up. A case under sections 147, 332 and 323, I.P.C., was registered by the police. Three policemen were injured as a result of the stone throwing. Six of the strikers were injured as a result of the lathi charge. They were treated in the General Hospital.

On the afternoon of 31st July 1958, the strikers picketed in front of "The Hindu" office in a peaceful manner. A police party was present at the spot to prevent untoward incidents. No incidents were reported.

The next day, i.e., 1st August 1958, at the request of the Management, sufficient bandobust was provided for the distribution of papers at "Vani Mahal" and Luz Corner, the two main distribution centres and this bandobust was continued throughout the period of the strike. In addition, bandobust was also provided at the Distributing Agent's house in Mylapore. There was peaceful picketing at the office of "The Hindu" on that day. Slogans were shouted, but no employee was prevented from going to work

nor was anyone threatened. No case of assault was reported in the night. The despatch of parcels from the office was carried on as usual. A feature of this day's picketing was that the members of the Simpson Group Company Employees' Union also joined the strikers in shouting slogans.

Peaceful picketing continued on the 2nd of August also. The usual police bandobust was provided. A complaint was made by Sri Gurunathan, Sports Editor of "The Hindu" that he was assaulted in a lane adjoining "The Hindu" office. He could not identify any of his assailants, though he stated that they were employees of "The Hindu" on strike. A case under sections 341 and 323, I.P.C., has been registered and it is under investigation. No other complaint was lodged with the police.

On the 3rd of August, the strikers were joined by the workers of Simpson and Co., "The Mail", The Express Newspapers. Oldhams Battery Company and members of the T.N.C.C. Labour Wing. The picketing was peaceful. Adequate precautions were nevertheless taken by the police. Attempts by strikers to obstruct vehicles entering or leaving the office were prevented by the police. The Assistant Commissioner of Police, Southern Range, who was present on the spot provided police escort for the Managing Editor, Sri K. Srinivasan, to enable him to leave the office. No incidents were reported on this date.

On the 4th August 1958, there was an increase in the number of demonstrations, who were joined by workers from the Simpson Group Companies, as it was a holiday for them. Adequate police precautions were taken.

Vehicles entering and leaving the office were as usual given the necessary facilities. Attempts to mob two cars carrying the Editor and Manager were averted by the prompt intervention of the Police.

Sri Parthasarathy, Assistant Edior, preferred a complaint at 3-30 p.m. at Triplicane police station that he was prevented by the crowd from entering "The Hindu" office at about 1-25 p.m. The police tried to trace the miscreants, but did not succeed.

Sri K. Narasimhan, Assistant Editor, complained that he was prevented by the strikers from entering the office at about 1-30 p.m. Enquiries were made by the police about this but the miscreants could not be traced.

On the evening of that day, packets containing "The Hindu" intended for despatch by rail were taken from "The Hindu" office in lorries. Three of the lorries left the premises without any interference. When the fourth lorry was taken out at about 6-50 p.m., the crowd in front of the office suddenly set upon the driver and others who were inside the lorry and assaulted them with the result that the driver and others sustained minor injuries. The lorry was also damaged. The police officials who were on

duty on the spot intervened promptly and prevented further damage. The injured were sent to the hospital in a police ambulance.

In connection with the above incident, the police have registered a case under sections 342 and 323, I.P.C., in the F-1 Chintadripet police station. The case is under investigation. Three of the accused have been arrested.

At about midnight on the 4th, a message was received by the Government from Sri K. Srinivasan, Managing Editor, that he felt unsafe to leave the office without police bandobust. Under instructions from the Government, the Commissioner of Police accompanied by the Deputy Commissioner of Police (Law and Order) immediately proceeded to "The Hindu" office. On reaching there, they learnt from the Inspector on duty that though an assurance of sufficient bandobust and escort was given to Sri Srinivasan by the Inspector, the Managing Editor was unwilling to leave the premises unless the Commissioner of Police went there. Sri Srinivasan informed the Commissioner of Police that he had requested the presence of the Commissioner of Police in "The Hindu" office not for the purpose of escorting him home but for giving an assurance to the loyal workers that protection would be given to each of them. Sri Srinivasan also told the Commissioner of Police that the morale of the loyal workers was breaking down and requested him to address the workers and to encourage them to continue to work. The Commissioner of Police declined to do so, stating that it was no part of his function to address loyal labourers to continue to work. Sri Srinivasan then decided to suspend publication of "The Hindu" and left the office.

On the 5th August 1958, at the request of the Management, police escort was provided for the transport of 38 employees at about 9-30 a.m. In regard to the remaining employees numbering about 200, the management wanted them to be transported in police vehicles, as they had no vehicles at their disposal. Arrangements were, therefore, made to secure the required number of vehicles and by about 3 p.m. all the workers were able to leave the office.

I would also like to add that the policy of the Government in regard to the maintenance of law and order, where picketing by labour is involved, has been established for a long time. The Government have always had and continue to have primary responsibility in regard to maintenance of law and order. This responsibility includes not only protection of life and property against violence of any kind, but also maintenance of traffic and the normal life of the community. At the same time, the forces of law and order at the disposal of Government are not to be utilised for the suppression of strikes or picketing, provided they are peaceful and in strict consonance with the laws and regulations. There has been no deviation from this policy in the present case.

# INDEX TO MADRAS LEGISLATIVE COUNCIL DEBATES

## THIRTEENTH SESSION OF THE LEGISLATIVE COUNCIL UNDER THE CONSTITUTION OF INDIA.

**Volume XXVI (Nos. 1 to 7).**

*8th to 13th and 17th September* 1958.

### A

PAGES

A—*cont.*

PAGES

B—*cont.*

PAGES

C—*cont.*

PAGES

C—*cont.*

PAGES

D—*cont.*



E

PAGES

E—*cont.*

PAGES

E—*cont.*

PAGES

H



I



J

PAGES

L—*cont.*



M

PAGES

M—*cont.*

PAGES

M—*cont.*

PAGES

P—*cont.*

PAGES

*—cont.*

PAGES

P—*cont.*

PAGES

P—*cont.*

PAGES

P—*cont.*

PAGES

P—*cont.*

PAGES

P—*cont.*

PAGES

Q—*cont.*



C 49—5

PAGES

Q—*cont.*

PAGES

S—*cont.*

S—*cont.*

PAGES

S—*cont.*


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS



தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS